www.tamilarangam.net

Raya

அரசியல் ஆய்வு இலக்கிய காலாண்டிதழ் 8



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

ஜனவரி1992

Tijdschrift voor Tamils in Nederland

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'கொலண்ட்"டில் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்ட இரு ஈழத் தமிழர்கள் நினைவாக....

# ஓர் அகதியின் மரணம்

அவனது மரணம்
காரணமும் நியாயமும் அற்றது
இவனது மரணமும் அப்படியே.

"இது
கொலையா?
தற்கொலையா? விபத்தா?

தயவுசெய்து
தர்க்கம் வேண்டாம்
எதுவாயினும் அது
ஒரு உயிரின் அழிவு
கனவுகள் கற்பனைகளின் முடிவு

*கேக் நகரில்
விரையும் ரயிலின் முன்னர் பாய்ந்து
உடல் சிதைய ஒருவன் இறக்கலாம்

இன்னோர் நகரில்
குளக்கரை அருகில்
**வின்ரர் முடிய
தளிர்கள் அரும்பும்
பெரிய மரத்தின் வலிய கிளையில்
தூக்கு மாட்டி ஒருவன் சாகலாம்
எல்லாம் ஒன்றுதான்!

விசாரணைச் சபையின் கேள்விகள்
ஏன் உமது 20.10.85 வாக்கு மூலமும்
13.12.86 வாக்கு மூலமும்
வேறுபடுகிறது?

இராணுவத்தினர் தலையில் அடித்ததாய்
முன்னர் கூறினாய்
இப்போது முதுகில் என்கிறாய்
தயவுசெய்து தெளிவாய் கூறவும்

"இப்போது அகதிகள்
இங்கிருக்கச் சட்டம் இடம்தருமா?

சமாதான ஒப்பந்தம்
கைச்சாத்திட்டது யூலை 29-இல்

ஆகவே தர்க்கப்படிக்கு
இப்போ சமாதானமே
நிலவுதல் வேண்டும்
சட்டத்தின் படி இதுவே சரியுமாகும்.

பாதுகாப்பின்மை எவர்க்கும்
இல்லை. திருப்பி அனுப்பலாம்"

அவன் ரயிலின் முன் பாய்ந்தான்.
இவன் கழுத்தில்
கயிற்றை மாட்டினான்.

தர்க்கம், சட்டம்
அரசியல் விவாதம்
விசாரணைச் சபைகள்
ஒரு புறம் போக
அழிந்து போனது
மனிதனின் கனவு!

-சித்திரா-

*Denhaag நகர் **குளிர்காலம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஆஇ

A AA IE

## காலாண்டு இதழ்

சுவடு 8

ஜனவரி 1992

வெளியீடு
இலங்கைக் கலாச்சாரக் குழு
நெதர்லாந்து

முகவரி:
A AA IE
Post bus 85326
3508 A H Utrecht
Nederland

## எல்லோரும் மீட்பர்களே

சிலுவை சுமந்த
மீட்பன் ஒருவன்
என்றோ ஒருநாள்
போயினன் என்று
ஆயுதம் சுமந்த
மீட்பர்கள் வந்தனர்.
மக்கள் மீதே
சிலுவை அடித்தனர்
ஒன்றாய்...
பத்தாய்...
பலவாய் மக்கள்,
சிலுவை சுமந்த
மீட்பர்கள் ஆயினர்.

கனம் தங்கிய கனவான்களே!
மனம் திறந்து விண்ணப்பிகிறேன்
உங்கள் 'தராசுகள்' சரியானவையே
அதில்

'மானிட வலுக்கள்'

நிறுக்கும் போது
படிகளைக் கொஞ்சம்
பரிசோதியுங்கள்.

இரா.றஜின்குமார் 1990

நன்றி: "இருபதாம் நூற்றாண்டின்
ஈழத்துப் புறநானூறு"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஆஇ

காலத்துக்குக்காலம் தமது உண்மையான முகங்களை மறைப்பதற்காக இலங்கை அரசு தன்னால் முடிந்த பலகாரியங்களில் ஈடுபடுவதுண்டு. ஆயினும் அண்மைக்கால மாக முகங்களை மட்டுமல்ல வெளிஉருவங்களையே மாற்றும் அளவிற்கு "பசுத்தோலைப்" போர்த்துக்கொண்டு உலாவர முயற்சிக்கிறது. பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் பிரேமதாச அரசு உலகநாடுகளின் "உதவி" களைப் பெறவும் உள்நாட்டில் எதிர்ப்புக்களைச் சமாளிக்கவும் பசுத்தோலைப் போர்த்திக் கொள்வது ஒன்றும் இதுவரை நடக்காததொன்றல்ல. ஆயினும் இது கொஞ்சம் வித்தியாசமானதுதான்.

இலங்கைக்கு பொருளாதார உதவிகளை வழங்கும் நாடுகளுக்கு எதிர்வரும் காலங்களில் தனது உள்நாட்டுப் பிரச்சனைகளை தீர்வுக்குக் கொண்டுவருவதான "உறுதி" மொழிகளை வழங்கியிருப்பது அண்மைக்காலச் செய்திகளாகும். குறிப்பாக தமிழர் பிரச்சனையில் ஒரு "தீர்வு" எடுப்பதாக மேற்குலக நாடுகளின் இராசதந்திரிகளுக்கு நிதி அமைச்சின் பிரதிநிதி திரு பாஸ்கரலிங்கம் அவர்கள் "உறுதி" யளித்துள்ளார். இதன் அடிப்படையில் சமாதானமான ஒரு பேச்சுவார்த் தைக்கான ஒழுங்குகளை ஒரு பெரிய பாராளுமன்றக் குழுவொன்று கவனிப்பதும், ஓர் சர்வகட்சி மகாநாடு நடக்கவுள்ளதும் அண்மைக்காலச் செய்திகளாகும்.

இவை இவ்வாறு அமைய உல்லாசப்பயணத்துறை அமைச்சர் திரு. செள. தொண்டமான் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வடக்கே போவதற்கான முயற்சி களும் செய்திகளாகியுள்ளன. ஏற்கனவே "பல இரகசிய கடிதப்பரிமாற்றங்கள்" நடைபெற்று அதனால் பல அரசியல் வாதிகளின் "துள்ளல்களும்" "குதிப்புக்களும்" நடந்துகொண் டிருக்கவும் யு.என்.பி. அரசு "பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது" "புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்குவது" என்ற பல காரணங்களைக்காட்டி எதிர்கட்சிகளின் பிரச்சாரங்கள் குழப்பிக் கொண்டிருக்கவும், தொண்டமான் இது எனது தனிப்பட்ட முயற்சி என அறிவித்துள்ளார். இவரின் பேச்சுவார்த்தையில் பெரும்பாலும் புதிதாக அமையும் வடமாகாணம் ஒரு சுயாட்சி அமைப்பாகும் பழைய திட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தமிழர்களும்" ஒரு தீர்வை விரும்புவதான அறிகுறிகளே அதிகமாகவுள்ளது. தொடரான சண்டையும் பொருட்களின் தட்டுப்பாடும், மேலும் பல்வேறு விதமான நெருக்கடிகளும் மனித நீதிக்கு அப்பாற்பட்ட சாவுகளும் இழப்புகளும் ஒரு யுத்தத்தை வெறுத்து ஒரு தீர்வே வேண்டும் என்ற உந்தலைக் கொடுத்துள்ளது.

கடந்த மாதங்களில் சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) வழங்கிய மனித உரிமையைப் பேணுவதற்கான 32 தீர்மானங்களை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதிலும் குறிப்பாக யு.என்.பி.அரசின் சரித்திரத்தில் முதற் தடவையாக பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகளுடன் சண்டையில் ஈடுபட்டபோது மனித உரிமைகளை மீறியதாக ஏற்றுக் கொண்டுள்ளது. இது சம்பந்தமான 50 வழக்குகளை நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் அரசு கூறுகிறது.

1991 ஆனியில் சர்வதேச மன்னிப்பு சபையை முதற்தடவையாக இலங்கை அரசு உள்வர அனுமதித்தது. அதன் பின் வெளிவந்த மன்னிப்பு சபையின் அறிக்கை அரச படைகளும் விடுதலைப்புலிகளும் பல் வேறு மனித உரிமை மீறல்கள் நடத்தியதாக குற்றம் சாட்டுகின்றது. முன்பும் அரச படைகளும் J.V.P. யினரும் மனித உரிமைகளை மீறியதாக மன்னிப்பு சபை அறிக்கைகள் குறிப்பிட்டுள்ளன.

இவ்வருடம் மாசி 7 ல் பாரிசில், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமொன்று நடை பெறுகிறது. இதில் தொடர்ந்தும் இலங்கைக்கு உதவி வழங்குவதா? என்ற கேள்வி எழுப்பப்படும். 1990 ஐப்பசியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைக் காரணம் காட்டி - அவை நல்ல முறையில் பேணப்படாவிட்டால் உதவிக ளைக்குறைக்கப் போவதாக கூறியிருந்தது இங்கு குறிப் பிடத்தக்கது. இவ்வருடம் இலங்கை 860 மில்லியன் டொலர் உதவியும் கொடையும் பெற முயற்சிக்கிறது.

இவ்வருடம் இலங்கை அரசுக்கான நேரடியான உதவி நெதர்லாந்து அரசிடமிருந்து நிறுத்தப்பட்டுள்ளது. 1991 புரட்டாதியில் அபிவிருத்திக்கான அமைச்சர் PRONK அவர்கள் இலங்கையை முக்கியமான உதவி பெறும் நாடுகளின் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு முடிவெடுத்துள்ளார்.

1992 மாசி - பங்குனியில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்குழு ஜெனீவாவில் கூடுகிறது. இதில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி அதிகம் பேசப்படும் என்று எதிர்பாக்கப்படுகிறது. இச்சபையின் குழுவொன்று அண்மையில் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தீர்வுகளும்" "பேச்சுவார்த்தைகளும்" "ஒத்துக் கொள்ளல்களும்" வெறுமனே உலக நாடுகளின் உதவிகளுக்காக மட்டும்தான் என்று அமைந்துவிட்டால்..... உள்நாட்டில் குழப்பங்கள் தொடரத்தான் செய்யும். அது போல் அன்னிய உதவிகளும் - கடன்களும் நாட்டைக் குட்டிச் சுவராக்கிவிடும். யாராயினும் எந்தத்தலைவர்களாயினும் மக்களின் அபிலாசைகளைக் கவனத்தில் எடுத்து ஒருநிரந்தர தீர்வுகளுக்கு முன்வர வேண்டும். மீண்டும் ஒரு யுத்தத்திற்காக பேச்சு வார்த்தையைப் பாசாங்காக்க வேண்டாம் என்று நாமும் வலியுறுத்துகிறோம்.

------------------ ஆசிரிய குழு ------

# எம்மைப் பற்றி.....

அஆஇ இரண்டு ஆண்டுகள் தன் சுவடுகளைப் பதித்து நடை போட்டுள்ளது. இதன் ஆரம்பம் முதல் இதுவரை தனது எட்டு இதழ்களிலும் இதன் வளர்ச்சி நடந்துவந்த பாதை இதன்மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள் கண்டனங்கள் அவதூறுகள் ஆதரவுகள் பற்றிய குறிப்பு எங்களைப்பற்றி நீங்கள் புரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

ஐரோப்பிய சூழலில் ஒரு பத்திரிகை வெளியிடுவதென்பது எத்துணை கடினமானது! அதுவும் தமிழ் அச்சக வசதிகள் அற்றதும் பெரும்பாலும் இலங்கை சம்பந்தமானதுமான செய்திகளைத்தாங்கி தெளிவான கையெழுத்து பிற பல்வேறு அமைப்பு வேலைகளோடு வெளியிடுவதென்பது மிக மிகக் கடினமானது. செய்திகள் சேகரிப்பது, அவற்றை ஒழுங்கமைப்பது, வாசிக்கத் தூண்டும்படியாக எழுதுவது, படங்கள் சேகரிப்பது, பிரதிபண்ணுவது விநியோகிப்பது, போன்ற பல கடினமான பணிகள்- இவற்றுடன் எமது சொந்த வேலைகள் மற்றும் கல்வி குடும்பபணிகள் ஐரோப்பாவின் இயந்திரத்தனமான பல நடைமுறைகள், என்றவகையான கஷ்டங்களின் மத்தியில்தான் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவ்வகையான சிரமங்கள்

www.tamilarangam.net

அஆஇ வுக்கும் உண்டு. இதனோடு சேர்ந்து இயங்கும் இதன் சேவைகளில் ஈடுபடும் நாங்கள் எந்த லாப நோக்கையும் குறியாகக் கொண்டியங்கவில்லை. எமது சேவைகள் இந்த சமூகத்துக்கு பயன்படவேண்டும் என்ற அடிப்படை மட்டுமே எம்மிடம் உண்டு.

பல சிரமங்களுடே இப்பத்திரிகை வெளிவருகிறது என்பதற்காக இதன் மீது விமர்சனமோ கண்டனமோ வைக்கக்கூடாது என்ற எண்ணம் வேண்டாம். அஆஇ வெளிநாடுகளில் அதாவது புகலிட நாடுகளில் தமிழர்களால் வெளியிடப்படும் பத்திரிகைகளின் வரிசையில் முக்கிய பங்கை வகிக்கிறது. இது பத்திரிகையில் வெளிவரும் ஆக்கங்களால் மட்டுமல்ல. எம்மீது வைக்கப்படும் விமர்சனங்களாலும்தான். எனவே தொடர்ந்தும் இதயசுத்தியுடன் விமர்சனங்களை, கண்டனங்களை முன்வையுங்கள். உங்களது கடிதங்களும் ஆதரவுகளும் கண்டனங்களும் தொடரட்டும். மேலும் பத்திரிகை வளரும். பலரிடமும் அறிமுகம் செய்யுங்கள். வாசகர்கள் ஒன்றிணைந்து விவாதங்களை தொடருங்கள். உங்களோடு தொடர்பு கொள்ளவும் கருத்துக்களுக்கு களம் அமைக்கவும் நாம் விரும்புகின்றோம்.

எம்மீது வைக்கப்படும் மனம் திறந்த விமர்சனங்களும் ஆதரவுகளும் ஒருபுறமும் அவதூறுகள் குற்றச்சாட்டுக்கள் இன்னொரு புறமாகவும் உள்ளன. நாம் ஒரு கட்சி சார்பானவர்கள் அல்லது சில இயக்கங்கள் சார்பானவர்கள் என்று சிலர் எம்மீது அவதூறு பொழிவது இன்றுரை தொடர்கிறது. எமது ஆசிரிய தலையங்கங்கள், சில கட்டுரைகள், இன்னும் பல ஆக்கங்கள் என்பன பல்வேறு கருத்துக்கள் கொண்டவை. இவற்றினூடே விடுதலை இயக்கங்கள் அரசுகள் கட்சிகள் பலவற்றின் சரிகள் தவறுகளை சுட்டிக் காட்டியிருக்கிறோம். ' பல தவறுகளிலிருந்து சரியான நடைமுறைக்கு திரும்பவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம். பல உண்மையான சம்பவங்களையும் காலத்துக்கு காலம் ஏற்படுகின்ற பல அமைப்புக்களின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் பலதையும் எடுத்துக்கூறுகிறோம். இது ஒரு நேர்மையான பத்திரிகையின் கடமை. நாம் உண்மையைப் பேசுவதால் கட்சி இயக்கம் அரசு என்பனவற்றின் ஒருபக்க ஆதரவாளர்கள் எம்மை அவதூறு பேசுகிறார்கள். இவற்றை ஆழமாக வாசித்து அமைதியாக புரிந்துகொண்டு நிதானமாக முடிவுகளை எடுத்து எவரும் நேரடியாக "இந்த இயக்கம்""இந்தக்கட்சி" என்று சொல்லவில்லை. அஆஇ உண்மையைப் பேசுகிறது. இது எமது சுயநலத்துக்கு எதிரானது; இதை விட்டுவைக்கக்கூடாது என்ற நோக்கில் பேசப்படும் அவதூறுகள் அதிகம். ஆயினும் கொள்கை அடிப்படையில் எம்மீது வைக்கப்படும் தவறுகளுக்கான கண்டனங்களை நாம் நிச்சயமாக ஏற்றுக்கொள்வோம். நேர்மையாக பத்திரிகைக்கு எழுதுங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரம்பமுதலே பத்திரிகை அனுபவம் சிறிதுமில்லாத எங்களால் இப்பத்திரிகை நடத்தப்படுகிறது என்று குறிப்பிட்டிருந்தோம். பத்திரிகையில் பல குறைபாடுகள் உண்டு. எழுத்துப்பிழைகள், அமைப்பில் பல தவறுகள், சில தெளிவற்ற கட்டுரைகள், அனேகமாக அரசியல் விடயங்கள், சாதாரணமானவர்களை கவனத்திலெடுக்காமல் புத்திஜீவிகளின் தரத்துக்கு விடயங்கள் இருப்பது என்று... இவை பல வாசகர்களால் எமக்கு முன்வைக்கப்பட்ட கருத்துதான். ஆயினும் பல்வேறு விதமான வாசகர்கள் ஆக்கதாரர்கள் அஆஇ வுக்கு உண்டு. புத்திஜீவிகளும் சாதாரணமானவர்களும் அவர்களில் அடங்குவர். இருவகை சார்ந்துதான் நாமும் பல ஆக்கங்களை வெளியிட முயற்சிக்கிறோம். அஆஇ குறிப்பாக சென்ற இதழில் பல்வேறு திருத்தப்படாமல் விடப்பட்ட எழுத்துப்பிழைகள் காணப்பட்டன. இவ்வகை தவறுகளுக்காக உங்களிடம் மன்னிப்பு கோருவதுடன் இனிவரும் காலங்களில் இத்தவறுகளை திருத்த முற்படுகிறோம். இத்துடன் தமிழுக்கு புதிய எழுத்துவடிவங்களின் தேவையை உணர்ந்து பேராசிரியர் சிவசேகரத்தின் கருத்துக்களுடன் ஒன்றிணைந்து கடந்த இதழிலும் அதற்கு முந்திய இதழிலும் கவிதைகளிலும் ஆக்கதாரர்கள் பற்றிய குறிப்புக்களிலும் சில எழுத்து வடிவங்களை சேர்த்திருந்தோம். அவற்றையும் எமது எழுத்து பிழைகளாக சிலர் குறிப்பிட்டிருந்தார்கள். அவ்வெழுத்துக்கள் பற்றிய கட்டுரை ஒன்றை இனிவரும் இதழ்களில் வெளியிட முயற்சிக்கிறோம்.

தொடர்ந்தும் எமக்கு ஆதரவு தாருங்கள்.விமர்சனங்களை செய்யுங்கள். புதிய இதழ்களை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். உரிய சந்தாக்களை பெற்றுக்கொள்ளுங்கள். எம்முடன் சேவையாற்ற விரும்பும் எவரும் எமது முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

---

## சுகுமாரின் ஒரு கவிதை

தோழரே
துப்பாக்கியை உயர்த்தும்.
வலது தோளில்
உதைப்பை வாங்க ஏதுவாக.
நடுவில் உள்ள கோட்டிடை வெளியில்
நேரே, நேராக மட்டும்தான் பாரும்
எதிரி தானே அது?
வலது ஆள் காட்டி விரலை
பின்னோக்கி இழும்
சரியாக குறி பார்த்தால்
ஒரே குண்டே போதும் தோழரே.
சமயத்தில்
எதிரி கிடைக்கா விட்டால்
ஊரில் மனிதர்களும்
மின் கம்பங்களும் உண்டு.

அதுவும் கிடையாத போது
நெறி பிறழாத ஒரு தோழனை....

துப்பாக்கி சூடாறக் கூடாது பாரும்.
நியாயப்படுத்த தலைமைப் பீடமும்
பிரசுரம் அடிக்க வெளியீட்டுப் பிரிவும்
உள்ள தோழரே.
விடுதலைப் பாதையில்
வீறு நடை போடும்.

www.tamilarangam.net

# தமிழில் புகலிட இலக்கியங்கள்

கலைஇலக்கியம் என்பது ஒரு சக்திவாய்ந்த ஆயுதம்தான். இது மனித உணர்வுகளின் வெளிப்பாடு. சமுகத்தினதும், சூழலினதும், கொடுமைகளினதும், முரண்பாடுகளினதும் தோற்றுவாய். சிரிக்கவும், அழவும், சிந்திக்கவும், பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், போராடவும், நேசிக்கவும், மனிதத்தைகாப்பாற்றவும் தூண்டும் சக்தி அதற்குண்டு.

சொந்த நாட்டு அவலங்களினால் தமது நாடுகளிலிருந்து வெளியேறி புகலிட நாடுகளில் தங்கியுள்ளவர்கள் பலர் இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறான இலக்கிய முயற்சிகள் எல்லா இன சமுக மக்களாலும் பல நாடுகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு நாடுகளிலிருந்து தப்பியும் நாடு கடத்தப் பட்டும் மறைந்து வாழ்ந்தும் பல எழுத்தாளர்கள் புகழ்பெற்ற இலக்கியங் களை படைத்துள்ளார்கள். இவ்வகையான இலக்கியங்கள் காலம் காலமாக பல்வேறு உணர்வுடனும் சமுக அக்கறையுடனும் படைக்கப்பட்டு வருகிறது.

தமிழில் புகலிட இலக்கியங்கள் எண்பதுகளின் பின்னர் பல பரிமாணங் களை பெற்றுள்ளது. இலங்கையின் தேசிய இனப் போராட்டம் முனைப்பு பெற்றதனால் வெளியேறிய பலரின் இலக்கிய முயற்சிகள் அவர்கள் தங்கியுள்ள நாடுகளிலிருந்து வெளிவருகின்றன. இப் படைப்புக்களில் பெரும்பாலானவை சொந்த நாட்டின் அரசியல் நிகழ்வுகளின் பிரதிபலிப்பாகவும் அதன் மீதான விமர்சனங்களாகவும் ஆயுதக்கலாச்சாரத்திலிருந்து மீள்வதற்கான ஒரு எழுச்சியாகவும் உள்ளதுடன் புகலிட நாடுகளில் ஏற்படுகின்ற நெருக்கடிகள் இனவாதம் பெண்விடுதலை என்பனவும் அரசு இயக்கங்களின் மனித உரிமை மீறல்கள் ஜனநாயக மறுப்பு சுதந்திரமான கருத்துக்களுக்கு தடை என்பவற்றுக்கு எதிரான படைப்புக்களாகவும் உள்ளன. இவற்றுடன் சுற்றாடல் பற்றிய அக்கறை சுரண்டல் 3 ம் உலக நாடுகளுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வுகள் முரண்பாடுகள் பற்றியதாகவும் இன்னும் பல ஒவ்வோர் முக்கியமான பிரச்சினைகளின் மீது கேள்வி எழுப்புவனவாகவும் பல சமுக கலாச்சார வடிவங்களினதும் அவற்றின்

தவறுகள் மீதும் கேள்வி எழுப்புவன வாகவும் அமைந்துள்ளன. இன்னும் சிலவோ இயக்கங்களின் பிரச்சாரமாகவும் எந்த மறுப்பும் இல்லாமல் அவற்றிற்கு ஆதரவு நல்கவேண்டும் என்றும் பழமை பேணுதல் அரசர் கால தமிழ் மரபு வீர தீர சாகசங்கள் பெண்களுக்கு கற்பு நால்வகை குணங்கள் என்பனவாகவும் படைக்கப்படுகின்றன. இன்னும் சில ஒரு வருக்கொருவர் முகாம்களுக்கு முகாம் ஏற்படுகின்ற போட்டி பொறாமை காழ்ப்புணர்வு திட்டல்களாகவும் படைக்கப் படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளிலும் கனடா அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலு மிருந்து 60 க்கும் அதிகமான தமிழ் சஞ்சிகைகள் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.சில நாடுகளில் அந்நாட்டு மொழிகளிலும் (குறிப்பாக ஆங்கிலம்)பத்திரிகைகளை எம்மவர்கள் வெளியிடுகின்றனர். இவைகளில் பல கையெழுத்து பிரதிகளாக வெளிவந்து பின்னர் தட்டச்சு computer அச்சு பிரதிகளாக வளர்ந்து வருகின்றன. இவற்றில் பல புதியவர்களினதும் முன்னைய இலக்கிய ஆக்கதாரர்க ளினதும் படைப்புக்களை காணமுடிகிறது.

இச்சிறு சஞ்சிகைகள் பத்திரி கைகளுக்கு பல பயமுறுத்தல்கள் உள்ள போதிலும் பல தொடர்ந்து வெளி வருகின்றன.சிறு சஞ்சிகைகள் பத்திரிகை களுக்கு ஏற்படுகின்ற பணப்பற்றாக்குறை தமது சொந்த பணத்தையே செலவு செய்து வெளியிடுவது எழுதுவோரின் வாசகர்களின் ஆதரவின்மை போன்ற காரணங்களாலும் சில இடையே நின்றும் விடுகின்றன.ஆயினும் பல பத்திரிகைகள் தமது சமுக கடமையாக இவற்றை செய்ய வேண்டுமென்று தொடர்கின்றன.

இச்சஞ்சிகைகள் பத்திரிகைகள் பல ஆசிரிய குழுக்களாகவும் சில பொது அமைப்புக்கள் மூலமாகவும் சில தனிநபர்களாலும் நடத்தப்படுகின்றது. இவற்றில் பல திறந்த விவாதங்களையும் ஆரோக்கியமான விமர்சனங்களையும் கலை இலக்கியங்கள் அரசியல் சமுகப் பார்வைகளை உள்ளடக்கியனவாயும் அமைந்துள்ளன. இவற்றில் சிறுகதைகள் தொடர்கதைகள் கவிதைகள் போன்றன வும் இடம் பெறுகின்றது.

சிறுகதைத்தொகுதிகள் கவிதைத் தொகுதிகள் நாவல்கள் என்பனவும் பல கட்டுரைத்தொகுதிகளும் வெளிவருவ துடன் அவற்றுக்கான வெளியீட்டு வைபவங்களும் விமர்சன ஆய்வு அரங்குகளும் பொது இலக்கிய மகா நாடுகளும் இலக்கியச் சந்திப்புக் களும் கலை விழாக்களும் நடைபெறுகின்றன. குறிப்பாக இவை ஜேர்மனியில் மிக அதிகமாகவும் கனடா இங்கிலாந்து பிரான்சு நோர்வே அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் குறிப்பிடத்தக்க அளவிலும் இடம் பெறுகின்றன.

இவ்வகையான இலக்கிய அரசியல் ஆக்க முயற்சிகளில் பலர்

www.tamilarangam.net

அக்கறையுடன் கலந்து கொள்வதோடு சஞ்சிகைகள் பத்திரிகைகள் ஆக்கங்கள் புதிய வெளியீடுகள் என்பனவற்றை சேகரிப்பதிலும் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துகின்றனர். இவற்றை சேகரிப்பதும் பாதுகாப்பதும் மிக அவசியமானதொன்றாகும். இன்றைய சந்ததியின் ஆக்கமுயற்சிகள் எதிர்கால சந்ததிக்கு அவசியமானவை. பலருடைய ஆதங்கப்படி இன்று புகலிட நாடுகளில் முனைப்பு பெற்றுள்ள இச்சந்ததிக்குரிய இலக்கிய ஆர்வமும் முன் முயற்சிகளும் அடுத்த சந்ததிக்கு இருக்குமா? புகலிட நாடுகளின் மொழியும் கலாச்சார வடிவங்களும் அவர்களது சொத்தாகி விட்டால் அவ்வகையான ஒரு போக்கை எம்மவர்கள் வலிந்து சேர்ப்பதும் ஒரு குறைபாடேயாயினும் அதற்கும் மேலாக அடுத்த சந்ததியும் தமது கலை இலக்கிய கலாச்சார முறைமைகளை பின்பற்றுவதற்கான அம்சங்கள் புகலிட நாடுகளில் அதிகமாகவே உள்ளது. எனவே அடுத்த சந்ததியும் இவ்வகை சார்ந்த முயற்சிகளினூடு தமது கலை இலக்கிய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான வழிகளை தேர்ந்து எடுப்பதற்கு தூண்டுவதும் எமது கடமையாகும்.

அண்மையில் ஜேர்மனியின் தலைநகரான பேர்லினில் நடந்த ஐரோப்பிய தமிழ் மகாநாட்டில் இதன் மீதான கருத்துக்கள் பல தெரிவிக்கப்பட்டது. அம்மகாநாட்டில் கலந்து கொண்ட ஜேர்மனியரான Franz-Helmut Richter என்பவர் குறிப்பிடும் போது " எதிர்கால சந்ததிகளுக்காகவும் வேற்று நாட்டவர்கள் உங்கள் புகலிட இலக்கியங்களை தெரிந்து கொள்வதற்காகவும் அந்தந்த மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். புகலிட மொழிகளில் ஆக்கங்களை உருவாக்குவது அவசியமானதுடன் மிக முக்கியமானதுமாகும். அவ்வகையான முயற்சிகளில் சிலர் ஈடுபாடு காட்டுவது மிக வரவேற்கத்தக்கது என்பதுடன் பலரும் முன்வந்து இவற்றை நடைமுறைப் படுத்துவதும் நல்லது.

தேசிய வெறியனான கிட்லர் யூதமக்களின் புகலிட இலக்கியங்கள் பலவற்றை குவித்து எரித்தான் என்பது சரித்திரம்.அது போல் யாழ்ப்பாண நூலகத்தின் கிடைத்தற்கரிய பல ஏட்டுச்சுவடிகள் இலக்கிய வடிவங்கள் அன்றைய ஜே.ஆர். அரசினால் தீ வைக்கப்பட்டது.இவை எல்லாம் இன அழிப்பினதும் தேசிய வெறியினதும் பிரதிபலிப்பு. ஆயினும் இவற்றையெல்லாம் வென்று உலகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

குணநாயகம்

---

சஞ்சிகை அறிமுகம்

"OSAI"
C/O S.THIRUCHELVAM
20, RUE DE LA FOLIE MERICOURT
75011 PARIS
FRANCE

ஓசை
காலாண்டிதழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தொடரும் கடத்தல்கள்.....

தீப்பொறி அமைப்பை ஸ்தாபித்தவர்களில் ஒருவரான கேசவன், பல்கலைக்கழக மாணவர் இருவர் உட்பட 10பேர் மே மாதம் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரிவதற்கு முன் மீண்டும் 4பேர் புலிகளினால் கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் 30ம் திகதியன்று யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த த.செல்வநிதி, மனோகரன், இன்னொரு பெண் (பெயர் தெரியவில்லை) உட்பட வவுனியா மாவட்ட பாடசாலையொன்றின் ஆசிரியர் தில்லைநாதன் ஆகியோரே புலிகளால் கடத்தப்பட்டோராவர்.

கவிஞரும் பெண்ணிலைவாதியுமான த.செல்வநிதி (செல்வி, தமையந்தி என்ற பெயர்களாலும் அழைக் கப்படுபவர்) கலைப்பீட 3ம் வருட மாணவியாவார். "சொல்லாத சேதிகள்" என்ற கவிதைத்தொகுதியில் வரும் கவிஞர்களில் ஒருவரான இவர் யாழ் பெண்கள் ஆய்வு வட்டத்தின் உறுப்பினரும் ஆவார். யுத்தத்தினால் அநாதைகளாக்கப்பட்ட பெண் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக ஏற்கனவே புலிகளால் கொல்லப்பட்ட விரிவுரையாளர் ராஜனி திராணகமவால் ஸ்தாபிக்கப்பட்ட "பூரணி" பெண்கள் நிலையத்தின் பராமரிப்பாளர்களில் ஒருவராகவும் விளங்கினார். இப் பூரணி நிலையமும் ஏனைய பொது நிறுவனங்களைப் போலவே புலிகளால் "விழுங்கப்பட்டது" தெரிந்ததே.

செல்வி புளட்டின் உட்கட்சி ஜனனாயக மறுப்பு நடவடிக்கைகள் காரணமாக தான் அங்கம் வகித்த அதன் பெண்கள் அமைப்பிலிருந்து ஒதுங்கினார். "தோழி" என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த செல்வி புளொட்டின் பெண்கள் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராவார்.

30ம் திகதி செல்வி தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ற புலிகள் தாம் அவரை ஒன்றரை மணி நேரத்தில் "விசாரித்துவிட்டு" விடுவதாகக் கூறி அழைத்தார்கள். வீட்டார் அனுப்ப முடியாது என மறுக்கவே அவரைப் பலவந்தமாக இழுத்துச் சென்றனர். நாடக அரங்கவியல் விசேட பட்டப்படிப்பு மாணவியும் நாடகங்களில் ஆர்வமுடன் பங்கேற்று நடிப்பவருமான செல்வி பெண்கள் சம்பந்தமான பெங்களூர் மாகாநாட்டிற்கு மறைந்த பெண்நிலைவாதியும் கவிஞருமான சிவரமணியுடன் சென்று கலந்து கொண்டவர். ஆனால் புலிகளோ தம்மைப் பற்றிய தகவல்களை வெளியிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு

அனுப்புபவர் என்றும், கிறிஸ்தவ நிதி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளவர் என்றும் குற்றம் சாட்டி அவரைக் கடத்தியுள்ளனர். புலிகளின்" அலுவலகங்களில்" இக்கடத்தல் குறித்து விசாரித்த போது "உயிருக்கு ஆபத்தில்லை" என்று மட்டும் கூறினர்.

எந்த நேரத்திலும் கொல்லப் படக்கூடிய சூழலில் இருந்து வரும் இப் பிரசுரத்தை இயன்ற வரை பரவச்செய் யுங்கள், என்ற வேண்டு கோளுடன் எமக்கு கிடைத்த இப் பிரசுரத்தை வெளியிடுகிறோம். -ஆசிரிய குழு-




வணிக பீட மாணவரான மனோகரனையோ ஆசிரியர் தில்லைநாதனையோ கடத்தியதற்கான காரணம் இதுவரை புலிகளால் அறிவிக்கப் படவில்லை. எனினும் கேசவனுடன், பல்கலைக் கழக மாணவர்களான கோவிந்தன், சிறீநிவாசன் ஆகியோர் கைது செய்யப்பட்ட பின்னர் புலிகள் யாழ் பல்கலைக் கழகத்தில் நடாத்திய "கொள்கை" (கொலை?) விளக்கக் கூட்டத்தின் முடிவில் அவர்களை மன்னிக்க முடியாதா? என்ற கேள்வியை எழுப்பியவர் இந்த மனோகரனே என்பது குறிப்பிடத்தக்கது. (இது பற்றி எமது முதலாவது பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.)

புலிகள் தங்களின் இத்தகைய சனநாயக விரோத பாசிசத்தனமான நடைமுறைகளினூடாக எமது தேசத்தில் பல்வேறு துறைசார்ந்த புத்திசீவிகளையும், சனநாயகவாதிகளையும், போராளிகளையும் ஒன்றில் கொன்றோ, நாடுகடத்தியோ அல்லது சிறையிலடைத்துச் சித்திரவதை செய்தோ தம்மைப்பாது காத்துக் கொள்ளத் தொடர்ந்து முயன்றுவருகிறார்கள். தமிழீழ விடுதலையானது புலிகளுக்கும், கரடிகளுக்கும் தான் சொந்தமானது என்று புலிகள் நினைக்கிறார்கள் போலும். மனிதர்களே அற்ற ஒரு தேசத்தில், மனிதத்துவத்தின் புதை மேட்டின் மீது புலிக்கொடியை நாட்டி ஆட்சி செலுத்தும் வெறி

www.tamilarangam.net

புலிகளுக்கு இருப்பது பற்றி யாரும் பேசாமல் மௌனமாக இருப்பது எத்தனை நாளைக்கு?

உங்கள் ஒவ்வொருவருக்குமான சவக்கிடங்கையும் நீங்களே வெட்டுங்கள் எனப்புலிகள் உத்தரவிடும்வரை கேள்விகள் கேட்காமல் இருக்கப்போகிறோமா?

தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலைசெய் என முழுங்குவோம். புலிகளின் காட்டு மிராண்டித் தனத்தை அம்பலப்படுத் துவோம். தமிழ் மக்களின் விடுதலையில் அக்கறையுள்ள ஒவ்வொரு வருடையதும் உரிமை மட்டுமல்ல, கடமையும் கூட.

நண்பர்கள்(ஈழம்)

# குடுமி சின்னத்தம்பியார் புறுபுறுக்கத்....தொடங்கிவிட்டார் !

"என்ன பாருங்கோவன் கனபேரை புலிப்பொடியள் பிடிச்சு அடைச்செல்லோ வைச்சிருக்கினமாம். அதிலையும் பாருங்கோ இரண்டு வருசமா தாய் தேப்பன் மனிசி பிள்ளையள் ஆரையும் பாக்கக்கூட விடுகினமில்லையாம்.வேறை வேறை இயக்கங்களிலை இருந்தவையெண்ட ஐம்மிச்சத்திலையும் தங்களைக் காட்டிக்குடுத்திடுவாங்கள் எண்ட பயத்திலையும் இவை பிடிச்சு வைச்சிருக்கிற ஒண்டும் தெரியாதவையின்ரை தொகையெண்டால்...ம்.. இந்தச்சண்டேக்கையும் பிடிச்ச ஆக்களை பங்கருக்குள்ளை வைச்சு எப்பிடிக்காப்பாற்றுறது? கேக்கிறவைக்கெல்லாம் விசாரிச்சுப்போட்டு விடுவம் விடுவம் எண்டுதான் பொடியள் சொல்லுதுகள். ஆனா அப்பிடி வெளியிலை வந்தவையின்ரை தொகையை விரலிலை எண்ணிப்போடலாம். பிடிபட்ட ஆக்களின்ரை சொந்தக்காரர் கனபேருக்கு புலிப்பொடியள்தான் பிடிச்சதெண்டு தெரியாதாம். மனிசி பிள்ளையள் தாய் தேப்பன்

www.tamilarangam.net

இவையளுக்குக்கூட பிடிச்சு வைச்சிருக்கிறம் எண்டு சொல்லவேயில்லையாம். ஒரே சண்டையாத்தானே இருந்தது. அதிலை செத்துப்போச்சினமெண்டுதான் கனபேர் இப்பவும் நினைச்சுக்கொண்டிருக்கினம். பிறகு புலிப்பெடியளிட்டை மெல்ல மெல்ல விசாரிச்சுத்தான் அங்கையிருக்கினமெண்டு தெரியவந்திது. அதிலையும் கன அப்பாவியளை ஏன் புலியள் பிடிக்கினம் எண்ட எண்ணத்திலை கனபேர் இருந்திருக்கினம். ஆனா பிடிச்சவையைக் காட்டேல்லை எண்டதாலை இப்பவும் சனத்திட்டை ஒரு சந்தேகம் இருக்குது.

அரசாங்கம் அவசரகால சட்டத்தை போட்டு பதினெட்டு இருபது மாதம் ஒரு விசாரணையுமில்லாம கனபேரை சிறையிலை வைச்சு சித்திரவதையெல்லாம் செய்தது. இருபது மாதத்துக்கு பிறகு சட்டப்படி விசாரிக்க வேணுமெண்டு அப்புக்காத்துக்கள் கோடுகளிலை சத்தம் போட்டாங்கள். வாசிற்றிப்பெடியள் பள்ளிக்கூடப்பெடியள் சனங்களெல்லாம் கர்த்தால் எண்டு நடத்தினதுகள். பிறகு அரசாங்கம் பொய்வழக்குகள் எல்லாம் சோடிச்சு விசாரிச்சது. கனபேரைச்சிறையிலையும் அடைச்சது.சில பேரை விடுதலையும் செய்தது. அந்த அரசாங்கமே இதுகளையெல்லாம் செய்திருக்கு. ஆனா எங்கடை இனம் எங்கடை மொழி எண்டு சொல்லிற இவை ஏன் இப்பிடி அடைச்சு வைச்சிருக்கினமெண்டுதான் எனக்கு விளங்கேல்லை.

இப்ப கொஞ்ச நாளாய் புலியள் பெடியள் பெட்டையள் எண்டு சில பேரை பிடிக்கத்தொடங்கியிருக்கினம். முந்தி வேறை வேறை இயக்கங்களிலை இருந்து அவங்கடை மோட்டுத்தனங்களை எல்லாம் எதிர்த்து அவங்கடை சித்திரவதையளையெல்லாம் அனுபவிச்சு தப்பி ஒளிச்சு ஓடி வந்து தமிழ்ச்சனத்துக்கு அதுகளோடை இருந்து ஏதாச்சும் செய்ய நினைச்ச நல்ல பிள்ளையள் அதுகள். அதுகள் இந்த இந்தியா இலங்கை அரசாங்கங்களை நம்பாத பெடியள், அவங்களிட்டை காசோ, துவக்குகளோ, வேண்ட துப்பரவா விரும்பாத பெடியள், அதுகளையும் பிடிக்கிறாங்கள். அவங்களை அப்பிடியே விட்டால் தங்களையும் மிஞ்சிவிடுவாங்கள் எண்டுதானாம் பிடிக்கிறதும் முடிக்கிறதுமாய் இருக்கிறாங்களாம்.

இப்பிடியே எல்லாரையும் எதிரிகள் எண்டு நினைச்சுக்கொண்டு போனால் இது எங்கை போய் முடியப்போகுது? புலியளுக்கெதிராய் என்னைப்போலை எங்கடை சனமும் புறுபுறுக்கத் தொடங்கீட்டுதுகள்.இந்தப் புறுபுறுப்புக்கள் சாப்பாடு பிள்ளையளிடை படிப்பு ஒரே சண்டை நாலுபக்கமும் ஆமிக்காரன் குவிஞ்சிருக்கிறது சின்னப்பெடியளின்ரை சாவு பவுண்வரி எண்டு இப்பிடி வந்து கொண்டிருக்கு.எங்கடை வாய் சாப்பிடுறதுக்கும் குடிக்கிறதுக்கும் மட்டும்தான் எண்டு சனமெல்லாம் எவ்வளவு காலத்துக்குத்தான் இருக்கப்போகினம்?"

www.tamilarangam.net

## நூல் அறிமுகம்

இருபதாம்
நூற்றாண்டின்

### ஈழத்துப் புறநாநூறு



(23 கவிதைகளின் தொகுப்பு)

எழுதியவர்: இரா. ரஜீன்குமார்

வெளியீடு : ந.சுசிந்திரன்

முகவரி :

SUSSINDRAN N.Straube
Brunsbuettler Damm 21
1000 Berlin 20
Germany

## ஏகாதிபத்திய நியதிகள்

எங்கே தண்ணீர் இருக்கிறதோ
அங்கே வடிகால் இருக்கவேண்டும்

எங்கே ஒரு மனிதன் இருக்கிறானோ
அங்கொரு போலிஸ் இருக்கவேண்டும்

எங்கு மனிதன் சிந்திக்கிறானோ
அங்கு சந்தேகம் போதுமானது

எங்கு ஆயிரம்பேர் சிந்திக்கிறார்களோ
அங்கொரு அனுமதி வேண்டும்

எங்கு மக்கள் கிளர்ந்தெழுகிறார்களோ
அங்கே ஓர் ஆக்கிரமிப்பு வேண்டும்

எங்கு ஒரு சிலர் கிளர்ந்தெழுகிறார்களோ
ஒரு சூடு போதுமானது

எங்கே மக்கள் எம்மை செவிமடுக்கவில்லையோ
அவர்கள்மீது குண்டு போடப்படவேண்டும்

எவனொருவன் தொலைநோக்குடன் பார்கிறானோ
அவனுக்குக் காலம் நெருங்கிவிட்டது

எங்கு அதிக நேரம் இருக்கிறதோ
பயங்களும்,கதாநாயகர்களும் வரவேண்டும்

நாங்கள் அழிந்துபோகையில்
எங்களுக்குப் பின்னால் உலகமும் வரவேண்டும்.

ஜேர்மன் மொழியில்:Rainer Kirsch
(பி.தி.17.07.1934,பழைய DDRஐச் சேர்ந்த
எழுத்தாளர்)

தமிழில்: நிருபா/ சுசி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் கருத்துக்கள்

அஆஇவிற்கு! கடந்த இதழ் ஏன் இவ்வளவு எழுத்துப் பிழைகளுடன் காணப்பட்டது? அவற்றில் கவனம் செலுத்தக்கூடாதா? பிழைகளைத்திருத்தி வெளியிட்டால் அஆஇ இன்னும் சிறப்பாக அமையும். சூழல் அசுத்தமாதல் பற்றிய பகுதிகளைத் தொடருங்கள். இன்று சமூகத்திற்குத் தேவையான விஞ்ஞானப் பகுதிகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

......................சிவா,நெதர்லாந்து

உங்கள் புத்தகத்தில் "நெதர்லாந்தில் கல்வி" என்ற கட்டுரையை வாசிக்க முடிந்தது. எனது பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமான கன விடையங்கள் அதில் இருந்தது. இந்நாட்டு மொழியில் வாசித்து விளங்கிக் கொள்ள முடியாத எனக்கு இது பெரும் உதவியாக இருந்தது. இவ்வகையான விடையங்களை அதிகம் எழுதுங்கள்.

................சாந்தி நெதர்லாந்து.

தங்களின் அஆஇ இதழ் பார்த்தேன் தங்களின் இவ்வகை முயற்சிகளுக்குப் பாராட்டுக்கள். பல நல்ல விடையங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. நான் ஒரு மாணவன் நெதர்லாந்து மொழியைக் கற்று படிப்பைத் தொடர முயற்சிக்கிறேன். தமிழ் மொழி மூலம் இலங்கையில் படித்தவன். நெதர்லாந்து மொழியைக் கற்பதற்கு வசதியாக இங்கு டச்சு-தமிழ் அகராதி எதுவும் இல்லை. அம்முயற்சியில் யாராவது ஈடுபடுவார்களா?.

................குணம் நெதர்லாந்து.

அன்புடன் ...... இப்போது துப்பாக்கிக்குப் பயந்துதான் மக்கள் வாழ்கிறார்கள். உணவிலும் கைவைத்துவிட்டார்கள். எல்லாம் பங்கீட்டு அடிப்படைதான். எரிபொருட்தடையால் விவசாயம் பாதிப்படைந்துவிட்டது. அதனால் எல்லாம் விலை ஏற்றம். பல பகுதிகளிலும் 400 கிலோ குண்டுகள் வீசப்படுகின்றது. பெரும் சத்தமும் அதிர்வும் சேதங்களும் அதிகம். தற்போது ஊரியான் பாதையைப் பாவிக்கிறார்கள். அதுவும் 4 மைல் தோளளவு தண்ணீரில் இரவில் நடக்க வேண்டும். சேறும் சகதியும், மழையில் நனைந்து, செல் அடி, துப்பாக்கிச்சூடு மத்தியில் உயிரைக் கையில் பிடித்து நடக்க வேண்டும். ஆனையிறவுப் பாதையை அனுமதிப்பதில்லை வெளியில் இராணுவம் மக்களைப் பணயம் வைத்து வந்துவிடும் எனக் கூறிக் கொள்கிறது.

2-12-91... ஒரு தாய், இலங்கை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் பரீட்சயமான காற்று கொதிக்கும் வெய்யில் மழை. மழை மண்ணில் கிளப்பும் அதே வாடை, செருப்புக் கால்கள் வாசலில் தட்டும்போது உதிர்க்கும் மண்துகள்கள் இன்னும் மாறிவிடவில்லை. நாம் அதே நிலத்தில் இன்னும் இருக்கிறோம்.

ஆனாலும் எங்கோ ஒரு விவசாயி துலாமிதித்துக் கொண்டு பாடும் பாட்டை இப்போது நாம் கேட்பதில்லை. துல்லியமாய் ஒரு அமைதிப் பொழுதை ஊடறுத்து எழுகின்ற கோயில் நாதம் கூட தன்பாட்டிற்கு அடித்து ஓய்ந்து போய் விடும்வரை எவரது கவனத்தையும் ஈர்பதாய் இல்லை. திருமண வீடும், மகப்பேறும், பருவச்சடங்கும் சலித்துப் போய் விட்டது. அழுகை என்பது அலுத்துப் போய் விட்டது. ஒப்பாரிகளை நாங்கள் இப்போது பாடமாக்கி ஒப்பித்து விடுகிறோம். ஏதோ ஒன்று இன்னும் குறைகிறது. எம்மில் இருந்து ஒரு நரம்பு உருவப்பட்டு விட்டது.

கசோரைனா பீச்சும், கீரிமலையும், எப்போதோ எம்மிடம் விடை பெற்றுக் கொண்டன. இப்போது நீங்கள் எம்முடன் உலாவ வந்தால் நாங்கள் சைக்கிளில் போகும் பாதை நெடுக இடிந்த சுவர்களை உங்களுக்குக் காட்டுவோம். பழைய நாகரீகத்தின் பெருமை தேடுகின்ற புதை பொருள் ஆய்வாளர்கள் யாரும் உங்களில் இருந்தால் இந்த இடிபாடுகளின் நடுவே எம் புதிய நாகரீகத்தில் ஏதும் மீதம் இருக்குமோ எனத் தேடச் சொல்வோம். மழை நீரில் இன்னும் கரைந்தும் கரையாத கரித்துண்டு வாசகங்கள் ஒரு வேளை எஞ்சியிருக்கலாம்.

# யாழ் நகர வாழ்வு



*வரலாற்றுச் சக்கரம் பின்னோக்கி சுழல்வதில்லை என்று யாரோ சொன்னார்கள். ஆனால் நாமோ வரலாற்றின் முன்னைய காலங்களிற்கு விரட்டப் பட்டுக் கொண்டிருக்கின்றோம்.*

www.tamilarangam.net

முச்சுக்காற்றைத் தவிர எதுவுமே எமக்கு மறுக்கப்பட்டு விட்டதனால் இப்போது நாம் கற்களைத் தட்டிப் பொறியுண்டாக்கும் பண்டைய காலத்துத் தேடலுக்குப் போய் விட்டோம். பனம் பழத்தில் குளிக்கிறோம் சாம்பலில் தோய்கிறோம். சைக்கிள் சில்லைச் சுழற்றி டைனமோவில் வானொலிச் செய்தி கேட்கிறோம். பஞ்சுத்துண்டுடன் ஒரு துளி எண்ணெயில் விளக்கேற்றிக் கொள்கிறோம். வரலாற்றுச் சக்கரம் பினனோக்கிச் சுழல்வதில்லை என்று யாரோ சொன்னார்கள். ஆனால் நாமோ வரலாற்றின் முன்னைய காலங்களுக்கு விரட்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

கிணறு வெட்டப்போய் பூதம் வந்தது என்று சொல்வார்கள். அது என்னமோ தெரியாது ஆனால் நாம் மட்டும் இப்போ கிணற்றுக்குள்தான் வாழ்கிறோம். எமது உலகம் ஒரு சிறிய வட்டம். எங்கள் கோசங்கள்தான் இடி முழக்கம் எதிரொலிக்கும் ஒவ்வொரு தடவையும் உலகம் முழுக்க அதிர்வதாய் உணர்வோம். இன்னும் நாங்கள் கிணற்றுத் தவளைகள். தவளை இனத்தைத் தவிர உலகில் சிறந்த இனம் ஏதும் இல்லை என்பது மட்டும் எமக்குத் திண்ணம். நாங்கள் நால்வர் சந்திக்க நேர்ந்தால் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய முத்த குடியென பெருமை சொல்லி ஒருவரு க்கொருவர் முடி சூட்டிக் கொள்வோம். நீரில் மட்டும் நிழலைப் பார்த்தால் மீண்டும் நாங்கள் தவளையாய் தெரிவோம். எப்போதாவது தப்பிக்க நினைத்து தத்திப்பாய எத்தனிப்பதுண்டு. ஈரடி பாய்ந்தால் ஓரடி சறுக்கும். மறுபடி பாய மனமின்றி மீண்டும் நாங்கள் கிணத்துக்குள் குதிப்போம்.

வெளியே வசிக்கும் எல்லோ ருக்கும் நாங்கள் ஒரு விந்தையாய் தெரியலாம். ஒரு சிலர் எம்மைச் சந்திக்க நேர்ந்தால் எப்படி உங்களால் வாழ முடிகிறது என்று மட்டும் வியந்து கேட்பர். மண்புழு கூட அங்கு வசிக்கிறது. வாழ்க்கை பற்றிய உத்தர வாதம் யாரும் அதற்குக் கொடுத்தது இல்லை. மண்ணைத் தோண்டி மண்ணைப் புசித்து மண்ணைக் கழித்து அதுவும் வாழுது. நாமும் வாழ்கிறோம்.

யாரையும் நாங்கள் நொந்து கொள்வதில்லை. விதியைப் பற்றி கவலை கொள்வதில்லை. நாட்கள் நகர்வது எமக்குத் தெரிவதுமில்லை. எமக்கு இருபத்தி நான்கு மணித்தியாலங்கள் தேவையில்லை. இரண்டு மட்டும் போதும். ஒன்று பகல், மற்றது இரவு. ஒன்றைத் துரத்திக் கொண்டு பொழுதை அவையும் பதித்துச் செல்லும்.

எங்களுக்கு எப்போதாவது கப்பலில் உணவு வரும். அதைக் கொண்டு எம்மை நீங்கள் அகதிகள் என்று கருதி விட வேண்டாம். தப்பு நாம் கைதிகள். திறந்த சிறைச்சாலையில் அடைத்து வைக்கப் பட்ட யுத்தத்தின் கைதிகள். சட்டம் யார் இயற்றிய தென்பதையும் அறியோம். குற்றம் என்னவென்பதையும் அறியோம். ஒரு

www.tamilarangam.net

வேளை சுந்தர மூர்த்தி நாயனார் சிவனுக்கு அடிமை ஓலை எழுதி வைத்தது போல் நாமும் முற்பிறப்பில் யாருக்கும் எழுதிக் கொடுத்தோமோ என்னமோ?.

எம்மைப் பார்த்து ஏளனம் செய்யும் ஒருவர் "அக்கா அக்கா என்று நீ அழைத்தாய், அக்கா வந்து கொடுக்க சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே" என பாரதிதாசனின் பாட்டொன்றைக் காட் டலாம் ஆனாலும் பார்ப்பதெதுகேட்பதெது பேசுவதெது என கட்டளை இட்டு நீர் சுதந்திரம் பற்றி எமக்கு சொல்லித்தர வந்தால் சுக்குக்கும் மிளகுக்கும் சுதந்திரத்திற்கும் வித்தியாசம் ஏதும் விளங்குமா என்ன?.

ஆனாலும் யுத்த மேகங்கள் கருக்கட்டும் போது நாங்கள் எப்படிப் பதுங்குவது என பயின்று கொண்டுள்ளோம். ஒரு தட்டில் உணவும் சுடுதண்ணிப் போத்தலில் தேனீரும் கொண்டு யுத்த விமானத்தை அண்ணாந்து பார்த்தபடி பங்கருக்குள் நாங்கள் எப்போதும் தயார் நிலையில். அல்லோல கல்லோலம் ஓய்ந்த பிறகு மந்தையிலிருந்து பிரிந்து போன ஆடுகள் தொகையை எண்ணிக் கணக்கெடுப்போம்.

வாழ்வு எமக்குள் பாகுபாட்டை விதித்திருந்தாலும் மரணம் அப்படி வேறுபாடு காட்டுவதில்லை. ஒரு நாள் ஒரு ஆசிரியர் மறுநாள் ஒரு வயோதிபப் பெண், இன்னொரு நாள் ஒரு டாக்டர். மழை காலம் தான் இன்னும் சோதனையான காலம். பாருங்கள் அழிந்து விடும். எங்கள் மரணங்கள் இப்போது சுதந்திரமாக தேர்ந்தெடுக் கப்படும்

ஆனாலும் மரணம் எமக்கு வேதனை ஆனதல்ல. வேதனையானது என்னவென்றால் வாழ்கைதான். என் உடலின் தேவை, என் அறிவின் தேவை என் உணர்வுகளின் தேவை என்னில் தங்கியுள்ளவர்களின் தேவை என் சமூகத்தின் தேவை இவை எல்லாவற்றிற்கும் மரணம் ஒரு இலகுவான பதிலை வழங்கி விடும். நாளைய கேள்விகளை முற்றுப்புள்ளி ஆக்கிவிடும்.ஆனால் வாழ்கையோ இவை எல்லாவற்றிற்கும் பதில் சொல்லியாகப் பணிக்கப் பட்டுள்ளது.

திக்கு முக்காடுபவர்கள் வெளி யேறிவிட நினைப்பதுசிரமம். வருடக்கணக்காகச் சேமித்துச் சேமித்துச் சிறுகச் சிறுகக் கட்டிய வீடு அவர்களுக்கு இப்போதெல்லாம் விற்க முடியாது. ஒரு குண்டின் மூலம் எப்போதும் அழிந்து விடக்கூடுமானாலும் அதை போராட்டத்திற்கென்று அத்தனை சுலபமாக உவந்தளிக்கச் சித்தமில்லை. எப்போதாவது திரும்புமென கனவு காணும் "நல்ல சூழ்நிலையில்" மகளைக்கரை சேர்க்க அதுதான் ஒரு சீதனச் சொத்து போராட்டத்தில் பங்குபற்றினாலும் விட்டாலும் போரினுள் வாழ வேண்டியது கடமைஎன்பதை மறந்துயார்தான் வெளியேற அனுமதி

www.tamilarangam.net

கேட்கத்துணிவது? போராட்டத்தை தனித்து விட்டு விட்டு தாங்கள் மட்டும் தப்பிக்க நினைத்தால் யார் தான் ஒப்புக் கொள்வார்கள்? ஆனால் வாழ்வதற்காகப் போராடுகிறோமா போராடுவதற்காக வழ்கிறோமா என்பது தான் எமக்குப் புரியவில்லை.

இதன் வாழ்க்கை மிகக்கடு மையானது ஆனாலும் பழகிப் போனது. பழகிப் போனதால் புளித்துப் போனது. புளித்துப் போனதால் உணர்ச்சிகள் மரத்துப்போனது. மரத்துப்போன பின்னால் விழுமியங்களும் பண்பாடும் உயரக்கட்டிய கோபுர உச்சியும் எப்படிப் போனாலென்ன என்பதில் அக்கறை ஏதும் இல்லை. அக்கறையில்லாது விடப்பட்ட கட்டிடம் புதர் மண்டும் புத்தெடுக்கும் ஒட்டறைச் சிலந்திவலை முழுவதும் மூடிப்படரும். எங்கள் மனங்களினுள்ளும் சிலந்திவலை. வலை மூடிய மனதை துடைத்து துப்பரவாக்கும் துடைப்பங்கட்டைச் சிந்தனை தானே. அதுதான் சிறைப்பட்டுப்போனதே! கலை என்பது ஒரு சமுகத்தின் நிலைக்கண்ணாடி என்று சொல்வர் ஆனால் சமுகம் நிலைகுலையும் போது உடைந்த கண்ணாடியில் விம்பம் உருச்சிதைந்து தானே தெரியும். விரக்தியும் மனவிகாரமும் உணர்ச்சியற்ற சடத்து வமும் அடுத்தவர்பற்றிய அக்கறையில்லாச் சுயநலமும் அகங் காரமும் அற்ப அடிவருடித்தனமும் மூர்க்கமும் வெறியும் புகைமண்டிய பொறாமையும் அன்பு பண்பு கருணைகழிவிரக்கும் அறிவு தெளிவு அனைத்தையும் மூடிப் பூஞ்சணம் போல பீடித்துக் கொள்ளுமோ? கிடுகு வேலிக்கு மேலால் மிளகாய் பரிமாறிக் கொள்ளும் கிராமத்து உறவுகள் எனிமேலும் எஞ்சுமோ? நாளைய சமுதாயத்தை படைக்க வேண்டிய பிஞ்சு முகங்களின் மனவார்ப்புகள் எப்படி அமையுமோ? இவை பற்றி நாம் சிந்திப்பதுமில்லை.

இடியோசை கேட்டால் ஒரு திக்கில் ஓடும் மந்தைக் கூட்டத்திற்கு சொந்தபுத்தி இருப்பதில்லை. மலை உச்சிக்கு வந்த ஒன்று பள்ளத்துள் வீழ்ந்தால் மற்றதும் வீழும் சாகும். மிஞ்சியவை இன்னொரு முழக்கத்திற்கு இன்னெரு திக்கில்.நாங்கள் இப்போது எந்தத்திக்கில்? மூன்று திக்கும் கடலால் சூழ கழுத்துப்புறத்தை ஆமிதிருக சுற்றிச் சுற்றி எங்கே ஓடுவோம்? யாழ் இசைத்துப் பாணன் பெற்றதாம் யாழ்ப்பாணத் திருநாடு. இன்று போரிசைக்கிறது. புது வாழ்வு பெறுமோ இல்லை சுடுகாடாய்ப் போய்விடுமோ?

------ நன்றி"அருவி"------

இலங்கையிலிருந்து வெளிவரும் ஜனரஞ்சக சஞ்சிகை

அருவி

தொடர்புகளுக்கு: "ARUVI" POST BOX. 1354 COLOMBO - 1

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நெதர்லாந்து:

## இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பவுள்ளதா..?

நெதர்லாநதில் அகதிகள் வருவதைத் தடுப்பதற்கான முயற்சிகள் பல்வேறு நடைமுறைகளைப் போட்டு இறுக்கமாக மேற்கொள்ளப் படுகின்றது. புதிய அகதிகளை ஒரு பொது முகாம் ஒன்றில் பராமரிப்பது, அவர்களுக்கான விசாரணைகளை நடத்துவது, காலம் தாழ்த்தாமல் முடிவுகளைக் கொடுப்பது. அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்புவது. சாதகமாக அமைந்தால் மட்டுமே உள் அனுமதிப்பது. இதில் குறிப்பாக அகதிகளுக்கான சேவையாற்றும் அமைப்பின் கருத்தின்படி மிகக்குறைந்த எண்ணிக்கை யானவர்களே அரசியல் அந்தஸ்த்தை பெற்றுக்கொள்வார்கள் என்றும் கூறுகிறது. மிக முக்கியமான ஆவணங்களையும் அகதிகளுக்கான அமைப்புடனான தொடர்பையும், ஆலோசனைகளையும் காலம் தாழ்த்தாமல் பெறுமாறு கேட்டுள்ளனர்.

இவை ஒரு புறமிருக்க அண்மையில் இலங்கை அகதிகளில் ஒரு குறிப்பிட்ட தொகையினரைத் திருப்பி அனுப்புவதான செய்திகள் வெளிவந்துள்ளன. இத்தொகையினரில் பெரும்பாலானவர்கள் நீண்ட காலமாக இங்கு வசித்து வருபவர்கள். அவர்களின் அரசியல் அந்தஸ்துக்கான கோரிக்கைகள் எல்லாவகையான நீதிசபைகளினாலும் விசாரிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டு இருந்தவர்கள் என்றும் அவர்கள் திருப்பி அனுப்பப்படவுள்ளவர் என்றும் செய்திகள் கூறுகின்றன. கொழும்பில் வாழ்வதற்கான சாத்தியங்கள் உள்ளவர்கள், கொழும்பைப் பிறப்பிடமாகவோ அல்லது உறவினர்கள் உள்ளதாக விபரங்கள் கொடுத்திருந்தவர்களும் திருப்பியனுப்பப்படலாம் என்றும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

கடந்த ஆண்டு நவம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பிடமிருந்து நெதர்லாந்து அரசுக்குக் கிடைக்கப்பெற்ற கடிதமொன்று கொழும்பில் "அமைதி நிலவுவதாக"க் கூறுகிறது. ஆயினும் உண்மையான அகதிகள் பலர் பாதிக்கப்படக்கூடும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வருடத்தில் கொழும்பில் நூற்றுக்குமதிகமான தமிழர்கள் காணாமல் போயிருப்பதும் தொழில் வாய்புக்களோ இருப்பிட வசதிகளோ இல்லாமல் உள்ள நிலமைகளையும் பல அமைப்புக்கள் சுட்டிக்காட்டி வருகின்றன.

இலங்கையில் தமிழர்களுக்கான பாதுகாப்புக்கும் நிம்மதியான வாழ்வுக்கும் உத்தரவாதம் இல்லாமல் அகதிகளைத் திருப்பி அனுப்புவது என்பது முற்றிலும் மனிதாபிமானமற்ற நடவடிக்கை என்பதை நாமும் சுட்டிக்காட்டுகின்றோம்.

www.tamilarangam.net

சுவடுகள்

# இனிமையானவை



*ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்*

"எது சரி எதுபிழை என்பது யாரால், என்ன விடையம் எப்படிப் பார்கப்படுகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது".

எனது நண்பன் என்னிடம் ஆணித்தரமாகச் சொல்லிக் கொண்டிருந்தான் அவனின் முகத்தை நான் பார்க்கவில்லை அவன் சொல்லிக் கொண்டிருக்கும் விடையங்களை காது தெளிவாகக் கேட்டுக்கொண்டிருக்க எனது பார்வை ஜன்னலுக்கு வெளியால் தெருவில் போகும் மனிதர்களில் பதிந்திருந்தது.
ஒருவித பயமுமில்லாமல் இவர்கள் தெருவில் போய்க் கொண்டிருக்கிறார்கள்.
எல்லாவீட்டிலும் நடப்பது போல் இவர்கள் வீட்டிலும் சண்டைகள், தர்க்கங்கள், கோபதாபங்கள் நடக்கலாம் வீதியில் நிம்மதியாய் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவசரமாய் ஓடிக் கொண்டிருக்கும் லண்டன் வாகனமொன்றில் இவர்களும் அவசரமாகப் போய் அடிபட்டு உயிரை விட்டால் யாரும் என்ன சொல்ல முடியும்; அதைத்தவிர இவர்களுடன் செய்து கொண்ட தர்கத்திற்காக, இவர்களின் அரசியற் கருத்து தங்களுக்கு ஒத்து வரவில்லை என்பதற்காக யாரும் இவர்களைத் தீர்த்துக் கட்டப் போவதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவர்கள் அதிர்ஷ்ட சாலிகள்
இன்றைய வறுமை, நாளைய செல்வம், எதிர்காலக் கனவுகளை ஈடு கொடுத்துக் கொண்டு நிம்மதியாகத் திரிகிறார்கள்.
எனது நண்பன் தன் பிரசங்கத்தை நிறுத்திக் கொண்டு எனது தோளில் கை போடுகிறான்.
"என்ன யோசனை" அவனது ஆழமான பார்வை எனது அடிமனதுக்குள் போய் துளாவி என் சிந்தனைக்கு உருவம் தேடத்துடிக்கிறது.
"என்ன யோசனையா" நான் கேட்பதை அவன் கேட்கிறான்.

"குமரன் இறந்தது அநியாயம்" எனது நண்பன் சம்பந்தன் குமரன் இறந்தது அநியாயம் என்று இதுவரை பத்து தடவைகள் சொல்லிவிட்டான்.
"அவன் தன்னை சாகப்பண்ணிக் கொண்டது தவறு" என்று நானும் பத்தாவது தடவையாகச் சொல்கிறேன். சம்பந்தன் அலுத்துப்போகிறான்.
"குமரனுக்குத் தெரியும்தானே இப்படி நடக்குமென்று"எனது குரல் எனக்கே வியப்பாக இருக்கிறது. எனது கருத்தை சமபந்தனின் மனதில் பதிக்க வேண்டும் என்பதற்காக எனது குரலில் ஒரு அழுத்தம்.
"பிறந்த அன்றே இறப்பும் இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும், அதற்காக கோழைகளாக வாழ்வதா" சம்பந்தனின் கேள்வி எனக்கு எரிச்சலை உண்டாக்குகிறது.
"இஞ்ச பாரும் சம்பந்தன் இலங்கையில் இப்ப நாங்கள் இப்பிடி ஒரு தத்துவமும் கதைக்க முடியாது. சுயசிந்தனை ஒன்றுமில்லாமல் இருப்பது தான் நல்லது"
"நீ ஒரு முட்டாள்" சம்பந்தன் வெளிக்கிட்டான்.
நான் ஒரு முட்டாளாம்!
எனக்கென்ன அவன் சொன்னால் எனக்குத் தெரியும் எப்படிப் பிழைத்துக் கொள்வதென்று, எப்படிப் பணம் சேர்ப்பது என்று, எப்படி மற்றவர்களுடன் இனிமையாகப் பேசுவதென்று. இவன் சம்பந்தனுக்கு என்ன தெரியும்?
இவன் சம்பபந்தனும் குமரன் மாதிரித்தான். குமரன் இப்படித்தான் சுயசிந்தனை, மனித உரிமை, மண்ணுங்கட்டி என்று வார்த்தைகளைக் கொட்டி விட்டுச் செத்துப் போய்விட்டான்.தானாக வருத்தம் வந்து செத்துப் போகவில்லை......
அதைப்பற்றி எனக்கென்ன?
குமரனின் சிநேகிதன் என்பதற்காக எனக்கேதும் வராமல் இருந்தால் அதுவே புண்ணியம். அப்படி ஒன்றும் வராமல் இருக்கத்தான் அவர்களுக்கு ஒரு மாதம் இவ்வளவு கெடுக்கிறேனே.
"உனக்கு குமரனைச் சரியாகப் புரியவில்லை"இது சம்பந்தனின் குற்றச்சாட்டு.
யாருக்கு யாரை முழுக்கத் தெரியுமாம்?
சம்பந்தன் சிலவேளை இப்படித்தான் சொல்வான்.என்ன செய்வது முற்போக்கு வாதம்

www.tamilarangam.net

என்ற பெயரில் இவன் சொல்வதையும் கேட்டுத்தான் வைப்போமே!

அப்படித்தான் நினைத்தேன் குமரனைச் சந்தித்தபோதும்.ஆறேழு வருடங்களாக இருக்கலாம். இலங்கையில் சிங்கள வகுப்புவாதம் கொலைவெறியாடிக் கொண்டிருந்தகாலம்.

இறந்து விட்ட நண்பன் குமரனைப் பற்றிக் கதைக்கும் போது மனதுக்குள் மறைந்து கிடந்த பழைய நினைவுகளும் கிளறுப்பட்டு வருகிறது.

குமரனைப் பற்றி எனக்கு என்ன தெரியும்?

அவனைப் பற்றி அவன் சொன்ன விடையங்களைத் தவிர நான் என்ன புரிந்து கொண்டேன்.

பார்த்தவுடனேயே வசீகரிக்கும் தோற்றம், கூர்மையான பார்வை, அழகான சிரிப்பு, அளந்து பேசும் வசனங்கள் யாழ்ப்பாணத்திற்கு மேல்ப்படிப்பு படிக்க வந்த வன்னி நாட்டவன்.

"அறை தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றான்.நான் அப்போது ரியூட்டறி ஒன்றில் பகுதி நேர ஆசிரியராக இருந்தேன்.அவனுக்கும் எனக்கும் இரண்டு வயது வித்தியாசம் இருக்கலாம். ஆசிரியர், மாணவன் என்று பழக முடியாத ஒரு மரியாதை அவனில் ஏற்ப்பட்டிருந்தது.

எனக்கு இரண்டு வயது கூட என்பதற்காக அவனை விட எத்தனையோ விடயங்களில் இளையவனாகத்தானிருந்தேன்.

"தெரிந்த ஒரு நண்பர் வீட்டில் தங்கியிருக்கிறேன்" அவன் சென்ன இடத்திற்குத் தற்செயலாகப் போனேன். வேண்டுமென்று போகவில்லை.

அந்த வழியாகப் போகும் போது அவன் சொன்ன விலாசம் ஞாபகம் வந்தது.

சைக்கிளைச் சாத்திவிட்டு உள்ளே போனேன்.

இவளவு இளம் பெண்கள் இருக்கும் இடத்தில் என்னென்று குடியிருக்கிறான் என்று ஆச்சரியமாக இருந்தது.

அவன் பெயர் செல்லி விசாரித்தேன்

ஒரு சின்னப்பெண் தன் எலிவால்ப் பின்னலுடன் ஓடிப்போய் குமரனை கூட்டிக் கொண்டுவந்தாள்.

குமரன் தன் அறைக்கு என்னைக் கூப்பிடவில்லை. தன்னுடைய சைக்கிளை எடுத்துக்கொண்டு என்னுடன் நடந்தான். நான்; கலகல வென்ற சிரிப்பொலிகளை கடைக்கண்ணால் கவனித்ததை கண்டுவிட்டு அவன் முகத்தில் புன்சிரிப்பு தவழ்ந்தது.

"இவர்கள் எல்லோரும் இந்த வீட்டுப் பெண்களல்ல வீட்டுக்காரரின் பெண்ணிடம் ரியூஷனுக்கு வருபவர்கள்.

அவன் எனது பொறாமையைக் கண்டுபிடித்துவிட்டு சொன்னான்.

"இட நெருக்கடி போலத் தெரிஞ்சுது அதுதான் பார்த்தன்" நான்சமாளித்துச் சொன்னேன்.

"ஓமோம் இட நெருக்கடிதான், வீட்டுக்காரருக்கு நிறையப் பிள்ளைகள்.

www.tamilarangam.net

வீட்டுக்காரரின் இளம் பெட்டைகளில் ஒன்று இவனது குட்டியாக இருக்குமோ என்று மனம் எரிச்சல் பட்டது. நாங்கள் இருவரும் அந்த வீட்டுப் பெண்களைப் பற்றி நினைத்துக் கொள்வதை வெளிக்காட்டாமல் கௌரவமாக நடந்து கொண்டோம்.

"என்ன பொழுது போக்கு" என்று கேட்டேன். போகும் வழியில் புதிதாக வெளிவரவிருக்கும் புதிய படத்தையும் பற்றிய விளம்பரம். இவன் என்னுடன் சேர்ந்து வந்தால் படம் பார்கலாம் என்ற நப்பாசை.

"எனக்கு என்ன பொழுது போக்கு நேரம் இருந்தால் கவிதை எழுதுவேன்".

"கவிதை?"

"உம் கவிதை"

"நல்ல பொழுது போக்கு"

"பிரச்சினையானது" அவன் மெல்லமாக முணு முணுத்தான்."

"கவிதை எழுதுவது பிரச்சினையா?" நான் வியப்புடன் கேட்டேன்.

"காதலிப்பது போல், அரசியலில் ஈடுபடுவது போல், கவிதை எழுதுவதும் ஒரு பிரச்சினையானதுதான்".

எனக்கு விளங்கவில்லை. நான் மௌனமாக நடந்தேன்.இருளத் தொடங்கிவிட்டது.

"இளமைக்குக் காதல், இலட்சியத்திற்கு அரசியல், அந்த எண்ணங்களுக்கு உயிர் கொடுக்கக் கவிதைகள்" அவன் பிரித்துப் பிரித்துச் சொன்னான்.

"ஆனால் எங்கள் சமுதாயத்தில் காதல்கள் அபூர்வம், ஏனென்றால் உறவுகள் பொருளாதார ரீதியில் உண்டாகிறது. எங்கள் சமுதாயத்தில் நியாயமான அரசியல் இல்லை எல்லாம் அதர்மத்தில் ஊறிப் போய்க் கிடக்கிறது. கவிதை எனது பொதுச் சொத்து எனக்கு விருப்பமான உருவத்தைக் கொடுப்பேன்".

நான் சிரித்தேன், ஏனென்றால் கலைஞர்களின் பேச்சு எனக்கு அதிகம் விளங்காது:

---

அதன் பின் நீண்ட நாட்களாக அவனைக் காணவில்லை. 1986ம்ஆண்டு தமிழ் பகுதிகளில் சிங்கள வகுப்புவாதக் கொலைகளுக்குப்பதில்,தமிழ் இயக்கங்களுக்கிடையே பயங்கரக் கொலைகள்.

தெரிந்த நண்பர்கள் பலர் திடீர் திடீர் என்று மறைந்துவிட்டார்கள்.

எங்கே போனார்கள் என்று விசாரிக்கப் பயம் எனக்கென்ன நான் இன்னும் கொஞ்ச நாட்களில் லண்டனுக்குப் போகப் போகிறேன்.

ரியூட்டரிக்கு வராமல் விட்டதுடன் குமரனைப் பற்றியும் அதிகம் தெரியவில்லை.

ஒரு பின்னேரம் பெரிய கடையில் எதிபாராமல் அவனைச் சந்தித்தேன். மிகவும் மாறியிருந்தான். இளைத்து, தாடிவைத்து சோகமாத் தெரிந்தான்.

www.tamilarangam.net

"படிப்பு எப்படி" என்று கேட்டேன்

"படிப்பா" அவன் ஆச்சரியப்பட்டான்

"ஏன் படிப்புக்கு என்ன நடந்தது?"

"படிப்பு பணக்காரர்களுக்கு சொந்தமான விடையம்" நான் பேசாமலிருந்தேன்.

"தம்பி இரண்டு பேர் இறந்துவிட்டார்கள். இயக்கங்கள் கொலை செய்து விட்டன". அவன் பெருமூச்சு விட்டான்.

நாங்கள் இருவரும் அது பற்றி மேற்படி கதைக்கவில்லை.

சந்தியைக் கடந்தபோது ஒரு பெண் இரண்டு குழந்தைகளுடன் கம்பத்தில் தொங்கும் பிணத்தைப் பார்த்துக் கதறி அழுது கொண்டிருந்தாள்.குழந்தைகள் கந்தல் உடுப்புகளுடனும் பஞ்சடைந்த கண்களுடனும்,பசி வயிற்றுடனும் தாயுடன் சேர்ந்தழுது கொண்டிருந்தார்கள்.

"இவர் சமூக விரோதச் செயலில் ஈடுபட்டதால் மரண தண்டனை கொடுக்கப்பட்டது" என்று தொங்கும் பிணத்தில் எழுதப்பட்டிருந்தது.

"பசியால் அழும் குழந்தைக்குச் சாப்பாடு கொடுக்க அடுத்த வீட்டுக் கோழியைத் திருடினால் மரணதண்டனை. தமிழ் மக்களைப் பயமுறுத்தி ஆயிரக்கணக்கில் வாங்கி ஆடம்பரமாக வாழும் தமிழ் தலைவர்களுக்கு என்ன தண்டனை?" குமரன் கேட்டான்.

நான் மறுமொழி சொல்லவில்லை.

நான் லண்டனுக்கு வந்துவிட்டேன்.

லண்டனில் அகதிகள் பெயர் சொல்லி அவர்களுக்கு ஒரு ஸ்தாபனத்தைக் காட்டிக் அவர்கள் பெயரில் ஆடம்பரமாக வாழும் படித்த தமிழர்களைக் கண்ட போது குமரனின் ஞாபகம் வந்தது.

தெரிந்த ஒரு நண்பனின் வீட்டுக்குப் போனபோது சம்பந்தனைச் சந்தித்தேன். தமிழ்ப் பத்திரிகை ஒன்று கிடந்தது. அதில் குமரனின் கவிதை தமிழ் பயங்கரவாதத்தை மறைமுகமாகத் திட்டியிருந்தது.

"இந்த ஆள் இலங்கையில் இருந்துகொண்டு இப்பிடி எழுத என்ன துணிவு " சம்பந்தனின் சொந்தக்காரர் ஒருத்தர் சொன்னார். இவர் தமிழ் அகதிகள் ஸ்தாபனம் ஒன்றில் பெரியவர்; கொழுத்த சம்பளம் இரண்டு வீடு வாங்கிவிட்டார்.

நான் மௌனமாகவே இருந்தேன். எனக்கேன் பிரச்சினை.

எனக்கு ஒரு டொக்டர் பெண்ணைப் பேசியிருக்கிறார்கள். பெரிய அழகு என்றில்லை, ஆனால் நல்ல சீதனம் கொழும்பிலும் வீடு.

நான் அதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது குமரனின் கவிதை பற்றி ஒன்றும் பெரிதாக நினைக்கவில்லை

அவனுக்கு என்ன துணிவு என்ற குரலில் இருந்த பயங்கரம் என்னை உறுத்திக்

www.tamilarangam.net

கொண்டிருந்தது.

நான் சாகப்பயந்தவன்: எனது அம்மா எத்தனையோ அர்சனைகள் செய்து எனது உயிருக்காக போராடியவள், இப்போதோ ஒரு டொக்டரைக் கலியாணம் செய்யப்போகிறேன் என்பதற்காக எனது உயிரைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கப் போவதில்லை.

நான் மற்றவர்களைவிடப் பெரிதாகி விடவேண்டுமென்ற உந்தலில் ஓடிக்கொண்டிருக்கிறேன். குமரனில் பரிதாபமும் வருவதுண்டு. அவனுக்கு ஒரு டிக்கட் வேண்டக் காசில்லை இருந்திருந்தால் அவனும் எப்போதோ லண்டனுக்கு வந்திருப்பான்.

சம்பந்தன் குமரனைப் பற்றி உயர்வாகக் கதைத்தான்.

"மற்றவர்களுடன் ஓடி,போட்டி போடாமல் தனக்கு விருப்பமானவற்றைச் செய்வது ஓர் இலட்சியம்தான்" சம்பந்தன் சொன்னான்.

"வாழ்கையின் சோதனைகளை வெற்றி கொள்ளாமல் கவிதை என்றும் கலை என்றும் தங்களை மற்ற மனிதர்களிடமிருந்து பிரித்துக்கொள்வது கோழைத்தனம்" எனது தர்க்கம் சம்பந்தனுக்குப் பிடிக்கவில்லை.

"தனக்குத்தானே இலட்சியத்தைப் படைத்துக் கொண்டு அந்த இலட்சியத்திற்காகவாழாமல் மற்றவர்களுடன் சுயசிந்தனையற்ற ஓட்டத்தில் மாட்டிக் கொள்வதுதான் கோழைத்தனம்" சம்பந்தன் விவாதித்தான்

"எனக்கு என் உயிரில் ஆசை" நான் முணுமுணுத்தேன்.

"நாங்கள் கோழைகள்.கொலைகாரர்களுடன் உறவு கொண்டாடி அவர்கள் கொலைகளை நியாயப்படுத்தி துப்பாக்கிகளுக்கு காசு கொடுத்து சுடுகாட்டை உருவாக்குகிறோம்." அவன் வெறுப்புடன் சொன்னான்.

"வாழ்க்கையில் சில மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை." நான் விட்டுக்கொடுக்காமல் சொன்னேன்.

"நாளைய பிணங்கள் இன்றைய பிணங்களை கணக்கெடுக்கிறோம்." அவன் சலித்துக்கொண்டான்.

"குமரனின் சாவுக்கு நீயேன் ஒப்பாரி வைக்கிறாய். அவன் நாட்டு நடப்பு தெரிந்து வாயைப்பொத்திக் கொண்டிருந்திருக்க வேண்டும்". நான் சீறி விழுந்தேன்.

"நீ சந்தோசப்படலாம் ஒருவிதத்தில் குமரனின் மரணம் உனது சீதனத்தை கூட்டலாம்". சம்பந்தன் சிரித்தான்.

"என்ன பேய்க்கதை கதைக்கிறீர்".

"இலட்சியவாதிகள் போராளிகள் கலைஞர்கள் புத்திஜீவிகள் இறந்து தொலைகிறார்கள். கோழைகள் வாழ்ந்துகொண்டு வளம் சேர்க்கிறார்கள். இலங்கையில் ஒவ்வொரு ஆண்மகனின் சாவும் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்னொரு ஆணிண் விலையைக்கூட்டி எங்கள் தமிழ்ப்பெண்களின் மார்க்கட் விலையை ஏற்றுகிறார்கள்".சம்பந்தன் போவதற்கு வெளிக்கிட்டான்

www.tamilarangam.net

அவன் கதைக்கும் குமரனின் கவிதைக்கும் இருந்த தொடர்பை என்னால் மறுக்க முடியவில்லை.

கனவுதான் என் கவிதையின் தலையங்கம்
பகலில் காணும் பயங்கரங்களை மறக்க இரவில் காணும் இனிய கனவில்
யாரும் என்னை துப்பாக்கியால் துரத்தவில்லை மிருகமென
என் இனிய கனவில் எல்லோரும் நல்லவர்கள்
பேசத்தெரிந்தவர்கள்- பேசிப்பழகுபவர்கள்
பகலில் காணும் மனிதர் வாயற்ற முண்டங்கள்
வார்த்தையென்றால் துப்பாக்கிதான்
எங்கள் பெயர் சொல்லி ஏமாற்றி வாழ்பவர்கள்
எங்கள் கடும் உழைப்பை கட்டணமாய் பறிப்பவர்கள்
யார் இவர்கள் எங்களுக்கு? யார் இவரைத்தெரிவு செய்தார்?
ஏந்திய துப்பாக்கிகள் எங்களுக்கா எதிரிகளுக்கா?
இன்று இங்கு நடப்பதென்ன? சுடுகாட்டு அரசாட்சி
துப்பாக்கி தூக்கிகளே! சுடுகாட்டு மன்னர்களே!
காடலையும் மன்னர்களே! காலம் வரும் உங்களுக்கும்
ஏழைகள் அழுகின்றார் இன்னுமொரு புரட்சி வரும்

--- நூல் அறிமுகம் ---

## உலகமெல்லாம் வியாபாரிகள்




எழுதியவர்
ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

வெளியீடு : நீலமலர்

கிடைக்குமிடம் : Vayal
5, Kutchery Lane
Mylapore Madras 600004

விலை : Rs.20/=

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற இதழின் தொடர்...

# இலங்கை : சிங்கள தமிழ் இனமோதல்

கலாநிதி P.சரவணமுத்து

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் முதல் அரசாங்கம் (1960 - 1964 ) பதவிக்கு வந்ததுமே சிங்கள மொழியை உத்தியோக பூர்வமாக்கும் கொள்கையை தீவிரமாக அமுல் படுத்தத் தொடங்கியது. மேலும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய பிரேரணைகளை மீண்டும் கொண்டுவரப்போவதாக அளித்த வாக்குறுதிகளுக்கு சிங்கள அரசு துரோகமிழைத்த நிலையிலும்கூட தமிழ் தலைமையானது பாராளுமன்றத்தில் அனுசரித்துப் போகும் நடைமுறையையே தொடர்ந்து கடைப்பிடித்தது.

இந்த சரத்துக்கள் தொடர்பாக ஐ.தே.கட்சியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1965 ல் ஐ.தே.கட்சியின் தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சியும் சேர்ந்துகொண்டது. தமிழ் மொழிப் பாவனை பற்றிய சட்டவாக்கம் அமுலானபோதிலும் அதிகாரப்பரவலாக்கம் பற்றி எதுவுமே நடைமுறைப்படுத்தப் படாததால் 1969 ன் நடுப்பகுதியில் அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சி பிரிந்தது.

தேசத்தை - அரசை அமைக்கும் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது இலங்கை அரசியலில்1956 ம் ஆண்டுத் தேர்தல் ஒரு மைல் கல்லாக அமைகிறது. தென்னிலங்கை அரசியலில் சிங்கள இனம் என்ற தனித்துவ குணாம்சத்தின் வெற்றியானது பெரும்பான்மை இனம் ஆட்சி அதிகாரத்தை சுவீகரித்துக் கொள்வதில் முடிந்தது. அரசியல் ஸ்திரத்தை பேணிக்கொள்ளவும் தேசியமயமாக்கத்தின் மூலம் பொருளாதார ஆதிக்கத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் தெற்கில் முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் வடக்கில் அரசின் ஒற்றையாட்சி அமைப்பிற்கு எதிரான தீவிரமான சவால்கள் குறிகாட்டத் தொடங்கியிருந்தன.

www.tamilarangam.net

<u>பிரிவினைவாதமும் கிளர்ச்சியும்:</u>
<u>அரசியலில் வன்முறைப்போக்கு</u>

1970 ல் தோற்றம் கண்ட அரசியல் நடவடிக்கைகளின் போக்கு பாராளுமன்ற ரீதியில் உடன்பாடு காணும் நிலைமை பூரணமாக சிதைந்து போனதை கோடி காட்டியது. அரசியல் முரண்பாடுகளுக்கு தீர்வு காண வன்முறையில் தஞ்சம் புகும்நிலை ஸ்தாபன ரீதியில் உருப்பெற்று வருவதை இது உணர்த்தியது.

சிங்கள, தமிழ் இளைஞர்கள் தத்தம் அரசியல் உயர் குழாத்தினர் மீது கொண்டிருந்த பெரும் அதிருப்தியானது, மத்திய அரசுக்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சி மூலமே தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கைக்கு அவர்களை இட்டுச் சென்றது. தெற்கில் சிங்கள இளைஞர்களின் பிரச்சினை சமூக, பொருளாதார, அரசியல் ரீதியிலான நலன்களில் கணிசமான பங்கினை கோருவதாக இருந்தது. கல்வி கற்ற சிங்கள கிராமிய இளைஞர்களைக் கொண்டு- தீவிர இடதுசாரிப் போக்கிற்கு உதாரணமாக 1971 ல் ஏற்பட்ட J V P கிளர்ச்சியானது இந்தியாவின் அன்னியத் தலையீட்டினைத் தொடர்ந்து 1987 ல் தீவிர தேசியவாத இயக்கமாக புது அவதாரம் பெற்றது.

வடக்கில் இளைஞர்களின் கிளர்ச்சி வேறுபட்ட விரக்தி நிலையிலிருந்து எழுந்தது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேற்கொண்ட பல்கலைக் கழக அனுமதித்தகுதி விதிகளின் அடிப்படையில் காணப்பட்ட இனப்பாரபட்சத்தை தடுப்பதில் அப்போதைய அரசியல் நிலைப்பாடு சந்தித்த தோல்வியினாலேயே இந்த அதிருப்தி நிலை எழுந்தது. 1970 களின் நடுப்பகுதியில் அரசியல் ரீதியாகத் திரண்ட இக்கசப்புணர்வு பெருந்தொகையான கெரில்லாக் குழுக்களைப் பிரசவித்தது. இன்றும் அவற்றில் LTTE பிரபல்யம் பெற்று விளங்குகிறது.

மறுபுறத்தில் ஸ்தாபிதமான அரசியற் கட்சிகளோ இந்த அந்நியத்தன்மையை மேலும் ஆழப்படுத்தின. பாராளுமன்ற அமைப்பு முறையைப் பலியிட்டாகிலும் தமது அரச அதிகாரத்தின் ஏக போக உரிமையை விஸ்தரிப்பதிலும் ஸ்திரப்படுத்துவதிலுமே அவை அக்கறை காட்டின. வன்முறை எதிர்ப்பியக்கப் போக்கைத்துரிதப்படுத்தவே இவை துணை போயின.

திருமதி பண்டாரநாயக்காவின் (1970 - 1977) இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கமும் அதனை அடுத்து வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான யூ.என்.பி (1977-1980) அரசாங்கம் இரண்டுமே

இந்தக்குற்றங்களை இளைத்தன. முன்னென்றும் இல்லாத வகையில் பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்று அதிகாரத்தை கையேற்ற இந்த இரண்டு அரசாங்கங்களுமே பிரிவினைவாதம் பலம்பெறத்தக்க விதத்திலேயே அவற்றைப் பிரயோகித்தன. இரண்டு அரசாங்கங்களுமே அரசியல் சட்டத்தை மாற்றி அமைத்தன. முதலில் 1972 ல் இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப் பட்டு பெரும்பான்மை இனத்தின் மொழி, மதத்திற்கு முதன்மை அளிக்கும் வகையில் சிங்களமும் பௌத்தமும் முதன்மைப்படுத்தப்பட்டன. இரண்டாவது தடவையாக 1978 ல் கால்( Gaull ) பாணியில் நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி முறை மூலம் பழைய அரசியல் அமைப்பு முறையை மாற்றினர். இவற்றில் மிகுந்த துர்க்குறியாய் அமைந்தது 1982 டிசம்பரில் யூ.என்.பி அறிமுகப்படுத்திய சர்வசன வாக்கெடுப்பாகும். 11 ஆண்டுகளுக்கு தேர்தலைப் பின் போட்ட இந்த வாக்கெடுப்பு கபடமான ஒரு முன் மாதிரியைத் தொடக்கியது. இது சட்டசபையின் உண்மையான பிரதிநிதித்துவம் அற்ற தன்மையோடு சேர்த்து தீவிரமான எதிர் அபிப்பிராயங்களிலிருந்து தம்மை முற்று முழுவதுமாக தவிர்த்துக் கொண்டுவிட்டது.

அரசாங்கம் ஜே.வி.பி யையும் தமிழ் தீவிரவாதத்தையும் ஒரே பொதுவான கண்ணோட்டத்திலிருந்தே அணுகியது. ஜே.வி.பி யினைப் பொறுத்தவரை அது அரசினை மாற்றி அமைக்கப் போராடும் அச்சுறுத்தல் என்றும் தமிழ் தீவிர வாதத்தைப் பொறுத்தவரை அது பிரதேச இணைப்பிற்கான அச்சுறுத்தல் என்றும் அரசாங்கம் கூறியது. இவை இயல்பில் பயங்கரவாத இயக்கங்கள் மட்டுமே என்று வரையறுப்பதன் மூலம் இவற்றின் சவால்களை சட்டவிரோதமாகக் காட்டுவதே அரசின் நோக்கமாயிருந்தது.

எதுவாயினும் தென்னிலங்கையில் தமது சொந்தத் தொகுதிகளிலிருந்தே எழுந்த ஆயுதக் கிளர்ச்சியானது அரசாங்கத்திற்கு கூடிய அபாய உணர்வினைத் தோற்றுவித்தது. அதனை அரசியல் ரீதியில் எதிர்கொள்ள முனைந்தது. சிங்களவர் ஆதிக்கம் வகித்த அரசாங்கங்கள் யாவும் அவை எத்தகைய தத்துவார்த்த நிலைப் பாட்டைக் கொண்டிருந்த போதும் மூர்க்கத் தனமான சங்கற்பத்துடன் அரசியல் ஸ்தாபன அமைப்பை காப்பாற்ற முனைந்தன. அதே சமயத்தில் தமது சொந்தக் கட்சிக்குள் எழுந்த தீவிரவாதச் சக்திகளை மழுங்கடிக்கும் வேலையையும் மேற்கொண்டன. 'புல்லையும் காட்டி சவுக்கையும் செலுத்தும்' இந்த அணுகுமுறையை ஜே.வி.பிக்கு எதிராக 1971 ல் சிறிமாவோபண்டார நாயக்காவும்,1989 ல் யூ.என்.பியில் ஜே.ஆருக்கு பின்வந்த பிரேமதாசாவும் கையாண்டனர்.

இதற்கு எதிரிடையாக தமிழ்த் தீவிரவாத்தை எதிர்நோக்கியபோது இவை

www.tamilarangam.net

எந்தவித சமரசத்துக்கும் இடம் கொடுக்காததுடன் சுத்த ராணுவ வாத்தையே பிரயோகித்தன. ஜெயவர்த்தனா ஆட்சியின் போது ராணுவம் ஸ்தம்பித்து நிற்கும் நிலையிலும் அரசியல் வங்குரோத்து நேரப்போகும் ஆபத்து நிலையிலும் மட்டுமே அரசியல் ரீதியில் தீர்வு காண நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்.

தமிழ்த் தலைமையோ புதிய தீவிரவாத அலையின் மத்தியில் அரசியல் நம்பகத் தன்மையை பேணவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தது. சிறுபான்மை இனத்தின் உரிமைகளை முற்றாக நிராகரிக்கும் வகையில் செயற்படும் ஐக்கிய முன்னணி அரசின் சட்டசபை நடவடிக்கைகளின் குறுகிய இனவாத சார்பினை வெளிப்படுத்தி விட்டு 1971 ல் அரசியல் நிர்ணயப் பேரவையிலிருந்து தமிழரசுக் கட்சி வெளிநடப்பு செய்தது. ஒரு வருடத்துக்கு பிறகு தமிழ் கட்சிகள் தமக்குள் உள்ள பேதங்களை மறந்து தமிழர் கூட்டணியை அமைத்தனர். 1976 ல் தமிழர்களுக்கு தமிழ் ஈழ தனி அரசை ஸ்தாபிக்கக்கோரும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றினர். அவசியமென்றால் ஆயுதப் போராட்டத்தின் மூலமும் தனி அரசை அமைக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது. தமது பெயரையும் தமிழர் கூட்டணி (T U F) என்பதிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி (T U L F) என்று மாற்றி அமைத்துக் கொண்டது.

தமிழ் ஈழத்துக்கான மக்கள் ஆணைக்கான தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றி ஈட்டிய போதும் இலங்கையின் தேசியப் பேரவைக்கு எதிரணியின் தனித்த பெரும்பான்மை கட்சி என்ற ரீதியில் பிரசன்னமாகியது. எதிர்க்கட்சித் தலைவர் என்ற உத்தியோகபூர்வ பட்டத்தையும் தலைவர் அமிர்தலிங்கம் ஏற்றுக்கொண்டார். எனினும் இதனாலெல்லாம் ஏற்பட்ட சிறிதளவு நம்பிக்கையும், தமிழர் பிரச்சினையை தெளிவு படுத்துவதற்கு, தான் சர்வகட்சி மகாநாடு கூட்டப்போவதாக ஜெயவர்த்தனா அரசு அளித்த வாக்குறுதியும் வெகு விரைவிலேயே காற்றில் கரைந்துவிட்டன. அந்த சர்வகட்சி மகாநாடு கூட்டப்படவே இல்லை. அரசாங்கம் பிரேரித்த மாவட்ட அபிவிருத்தி சபைத்திட்டமும் போதுமானதாக இல்லை என்று கூட்டணி அதனை நிராகரித்து விட்டது. இத்துடன், கொடூரமான பயங்கர வாதத் தடைச்சட்டம் அளித்த அதிகாரத்துடன், அமைச்சரவைக்குள்ளேயே வீசும் நச்சு இனவாதப்பிரச்சாரத்தால் உரம்பெற்று, ஒளித்திருந்து தாக்குதல்- பொதுமக்கள் மீதான அட்டூழியங்கள்- வசைமாரி பொழிதல் என்ற நச்சுச்சூழலை தக்க வைத்துக் கொண்டிருக்கும், ஒரு ஒழுங்கு, கட்டுப்பாடு இல்லாத ராணுவத்தின் எல்லை மீறிய கொலைவெறி அட்டகாசங்கள் சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை கொண்டு வரக்கூடிய எந்தச் சாத்தியத்தையுமே இல்லாது அழித்துவிட்டது.

இது 1983 யூலையில் அசைக்க முடியாதவாறு உறுதிப்படுத்தப் பட்டது. LTTE யின் தாக்குதலால் கொல்லப்பட்ட ராணுவ வீரர்களை அடக்கம் செய்வதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒழுங்கு முறையாகச் செய்யத் தவறிவிட்டமை தமிழருக்கு எதிரான காட்டுமிராண்டித் தனமான வன்முறையையும் வெளிவெளியான யுத்த சன்னதத்தையும் கட்டவிழ்த்துவிட த்துாபமிட்டது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப் பட்டனர் அல்லது வீடிழந்தனர். தப்பிப் பிழைத்தவர்கள் அகதிமுகாங்களில் தஞ்சம் புகுந்தனர். பலர் வடக்கு நோக்கியும், இந்தியாவிற்கும், வெளிநாட்டுக்கும் தப்பி ஓடினர். சொத்துக்களுக்கு பெருமளவில் சேதமிழைக்கப் பட்டது. கொழும்புத் தலைநகரிலேயே ஆகக்கூடிய அட்டூழியங்கள் நிகழ்ந்தன. எல்லாவற்றிலும் மிக இழிந்தது யாதெனில், அரசபடையின் ஒரு பகுதியினர் இந்தப் பயங்கரத்தில் ஒத்துழைப்புக் கொடுத்ததுடன் தாமும் நேரடியாகப் பங்கேற்றதும், ஆளும் கட்சியின் சில சக்திகளே இக்கொலை பாதகங்களுக்கு உடந்தையாக இருந்தது என்ற குற்றச் சாட்டுகளும்தான்.

அரசாங்கம் காலம் தாமதித்தாயினும் இந்தப் படுகொலையால் பாதிக்கப் பட்டவர்கள் மீதுதான் சாதுரியமாகக் குற்றம் சுமத்தியது. மிகவும் வெளிப்படையாகவே சிங்கள வெறித்தனத்தை சாந்தப் படுத்தும் வகையில் தேசப் பிரிவினையை ஆதரிப்பதைச் சட்டவிரோதமாக்கும் 6 வது சட்டத் திருத்தத்தை அரசாங்கம் அரசிலமைப்பில் புகுத்தியது. அதேசமயத்தில், சர்வதேச ரிதியில் பாதகமான பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டுவிடாமல் இருப்பதற்காக, இலங்கையில் ஜனநாயகத்தை அழித்தொழிப்பதற்கான திட்டமிடப்பட்ட சதி நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்தப் படுகொலைகளை அதிதீவிர இடதுசாரிக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர் என்று குற்றம் சுமத்தியது. ஜெயவர்த்தனா சட்டபூர்வமாக அங்கீகரித்த ஜே.வி.பி யும் 1982 ல் ஜனாதிபதி பதவிக்கு அவருடன் போட்டியிட்டு தோல்வி கண்ட அதன் தலைவர் ரோகண விஜய வீராவும் பிற தீவிரவாத இடதுசாரிக் கட்சிகளுடன் சேர்த்துக் குற்றம் சாட்டப்பட்டார்.

இந்த நடவடிக்கைகளின் திரட்சியான கூட்டுத்தாக்கம் யாதெனில், தமிழர்களையும் பிற ஸ்தாபனவிரோத சிங்க ள கட்சிகளையும் பூரணமாகத் தள்ளி வைத்துவிட்டு தேசத்தை உருவமைக்கும் பாராளுமன்றக் காலகட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது என்பதுதான். அதிதீவிரவாதத்துக்கும் பயங்கரவாத சக்திகளுக்கும் எதிராக ஜனநாயக அரசியல் அமைப்பை கட்டிக் காத்த தனிப்பெரும் வீரனாக தன்னைப் பற்றிய வெற்றிப் படிமத்தை சித்தரித்துக் காட்டவும் அரசாங்கத்துக்கு இது துணையாக அமைந்தது.

தொடரும்....

"அஆஇ"
இவ்வருடத்திற்கான புதிய சந்தாக்களை எதிர் பார்க்கிறது. முடிந்து போன தங்களின் சந்தாக்களைப் புதிப்பிக்குமாறும் புதிய சந்தாதாரர்களை அறிமுகம் செய்யுமாறும் நன்றியுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகதிகள் திருப்பிஅனுப்புதல்..நாடுகடத்துதல்!

இந்தியாவில் இலங்கை தமிழ் அகதிகளின் நிலை மிக மிக மோசமானதாகவே உள்ளது. ரஜீவ்காந்தியின் கொலையின் பின்னரும் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததன் தொடரில் இலங்கை அகதிகள் மீது பல்வேறு பாதுகாப்புப் படைத் தொல்லைகளும் பாராமுகங்களும் நடந்துகொணடுதான் உள்ளது. இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை தங்கள் அரசியல் லாப நோக்கங்களுக்காக பயன்படுத்தி வாழ்ந்த கட்சிகளும் அரசியல்வாதிகளும் இன்று எங்கு போனார்கள் என்று தெரியவில்லை. போராளிகளுக்கு உதவி வழங்கினார்கள் என்ற காரணத்தால் சிலர் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார்கள் என்பது ஒருபுறம் இருக்க வீரமுழக்கங்கள் செய்த பல "திராவிடர்கள்" சோலி வேண்டாம் என்று இருக்கிறார்கள். இதுவரை இலங்கைத் தமிழர்களுக்கு செய்த உதவிகளைவிட இன்றுதான் அவர்களுக்கான உதவிகள் மிக முக்கியமானதும் அவசியமானதுமாகும். ஆனால் இன்று நடப்பது நேரெதிராகவே உள்ளது.

அங்குள்ள அகதிகள் முகாங்களில் வாழ்வதை விட சொந்த நாட்டில் சாகலாம் என்பது இலங்கை அகதிகள் பலரின் அபிப்பிராயம். அவ்வளவு வேதனையான வாழ்வு.

படுபயங்கரமான சட்டங்கள் பொலிஸ் கெடுபிடிகள் என்பவற்றுக்குள்ளும் தமிழ் நாட்டின் இளைஞர் அமைப்புக்கள் பல இலங்கைத் தமிழர்களுக்கான ஆதரவுகளைச் செலுத்திக்கொண்டுதான் இருக்கின்றன. சிறு குழுக்களாக உள்ள பல புரட்சிகர ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்து இவற்றில் ஈடுபட்டுள்ளனர். ஈழ அகதிகளை வெளியேற்றாதே! ஈழப்போராளிகளை இழிவு படுத்தாதே! என்ற கோசங்களுடன் இவர்களது ஊர்வலங்கள் பொதுக் கூட்டங்கள் மறியல் போராட்டங்கள் நடந்துகொண்டுதான் உள்ளது. இவர்கள் மீது போலிஸ் கெடுபிடிகளும் இவர்களால் நடத்தப்படுகின்ற பத்திரிகைகள் மீது மிரட்டல்களும் வெளியிடுவதைத் தடுப்பதற்கான குறுக்கு முயற்சிகளும் இடம் பெற்றுள்ளன. "புதியஜனநாயகம்" என்னும் பத்திரிகையின் அச்சுப் பதிப்பகத்தாரர்களை மிரட்டியும் உள்ளார்கள். ஆயினும் இத்தடைகளையும் மீறி இவை வெளிவருகின்றன. ஆரம்பத்திலிருந்தே புரட்சிகர ஜனநாயக சக்திகளின் ஆதரவைவிட தமிழ் நாட்டின் மாநில அரசியல்வாதிகளில் தங்கி வாழ்ந்தவைகள்தான் எங்கள் இயக்கங்கள். இப்புரட்சிகர சக்திகளது நேர்மையான விமர்சனங்களால் இவர்கள் மீது இன்றுவரை எமது இயக்கங்கள் குரோதமும் அவதூறுகளும் கொண்டேயுள்ளனர்.

தற்போதய நிலையில் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை இந்திய வெளிநாட்டு அமைச்சுகளுக்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இது அமுலாக்கப் படுகிறது. இதன் முதல் நடவடிக்கையாக ஒரு குறிப்பிட்ட தொகையினர் திரிகோணமலைத் துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். அவ்வகதிகளை தாங்கள் விரும்பியே போவதாக பத்திரம் ஒன்றில் கையொப்பமிட வைத்து திருப்பி அனுப்பியிருப்பதாக செய்திகள் சொல்லுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அந்தி

சந்தா: 1வருடம்(தபாற் செலவு உட்பட)

| | | |
|---|---|---|
| நெதர்லாந்து | - | f 15;- |
| ஐரோப்பா | - | f 15;- |
| அமெரிக்கா | - | 20$ |
| ஆசியா | - | 20$ |
| அவுஸ்திரேலியா | - | 20$ |

வங்கி கணக்கு: 12 75 43 171

Rabobank,Odijk,Nederland.

மனித உரிமைகளுக்காகவும் ஜனநாயகத்திற்காகவும்
குரல் எழுப்பும் பத்திரிகை. நீங்களும் சந்தாதாரராகுங்கள்.

## சரிநிகர்

ஒரு வருட சந்தா
15$

6, அலோசாலை கொழும்பு-3 இலங்கை.

SARI NIHAR 6 ALOE AVENUE COLOMBO-3 SRI LANKA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்